தனிப் பிரதி ரூ. 5/–
ஆண்டுச் சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம்

## செய்திமலர்

மலர் : 9 இதழ் : 8 ஜூன் – 2013



**பலங்கொண்டு திடமனதாயிரு;**
**இந்த ஜனத்தின் பிதாக்களுக்கு நான் கொடுப்பேன் என்று**
**ஆணையிட்ட தேசத்தை நீ இவர்களுக்குப் பங்கிடுவாய்**

யோசுவா 1 : 6

ஆசிரியர். பேராயர். வே. தேவதாஸ்

## கிராம ஆலயம்



# மேந்திகேடா மத்தியப்பிரதேசம்

மத்தியப்பிரதேசம் ஜாபுவா மாவட்டம் ஜாபுவா தாலுகாவில் இந்த மேந்திகேடா கிராமம் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தைச் சுற்றி ஐந்து கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ள அனைத்து கிராமத்தினரும் பயங்கரக் குடிகாரர்களும் கொள்ளைக்காரர்களுமாய் காணப்படுகிறார்கள். காவல் துறையினர் கூட இந்தக் கிராமங்களில் அடிக்கடி செல்வதற்குத் தயங்குவார்கள். இந்தக் கிராமங்களில் அடிக்கடி கலவரம் ஏற்பட்டு பயங்கரமான சண்டையில் முடியும்.

இந்தக் கிராமத்தில் சகோ. சாம்ஜிபாய் என்பவரின் மனைவி பாங்ளிபேன் மூன்று வருடங்களாக பிசாசு பிடியில் சிக்கி அலைக்கழிக்கப்பட்டு பைத்தியம் பிடித்து வீட்டை விட்டு ஓடி அலைந்து திரிந்தார். இவர் சுகம் பெறுவதற்காக பல ஆடுகளையும், பல கோழிகளையும் வெட்டி பலியிட்டு மந்திரப் பூஜைகள் செய்தும் விடுதலை கிடைக்காமல், வடுபாரா கிராமத்திலுள்ள நம் ஷாலோம் சபை விசுவாசி சகோ. பச்சுபாய் பபேரியா என்பவரின மூலமாக 5 கி.மீ. தூரமுள்ள அந்தர்வேலியா கிராமத்தில் நமது ஷாலோம் ஊழியர் பாஸ்டர் ராஜேஷ் அவர்களிடம் அழைத்துச் செல்லப்பட்டு, ஜெபித்தபோது தேவன் பூரண விடுதலையைக் கொடுத்தார்.

இவரின் மகன் பாலுசிங் ஆண்டவரை ஏற்றுக் கொள்ளாமல் இருந்த சூழ்நிலையில், இவரது மகளுக்கு ஒரு வாரமாக ஒரே அழுகை உண்டானது. மந்திரம், பூஜைகள செய்தும் குணமாகவில்லை. இறுதியில் நமது ஊழியர் ஜெபிக்கவே தேவன் விடுதலையைத் தந்தார். இதனால் பாலுசிங் சகோதரரும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, ஊழியப் பயிற்சி பெற்று அவரது சொந்தக் கிராமமாகிய மேந்தி கேடாவில் 10 விசுவாசிகளுடன் ஊழியத்தினை ஆரம்பித்தார்.

2004ம் ஆண்டு இங்கு ஒரு சிறிய ஆலயம் கட்டப்பட்டது. தற்போது இங்கு 80 குடும்பங்களுக்கு மேல் விசுவாசிகள் பெருகவே ஆலயம் போதாதபடியால் 50x20 என்ற அளவில் ஒரு அழகிய ஆலயம் கட்டப்பட்டு கடந்த 19.04.2013 அன்று நம் ஷாலோம் பேராயர் V. தேவதாஸ் அவர்கள் தலைமையில் ஜெபிக்க, கோவில்பட்டி நெகேமியா ஆலயக்கட்டுமான ஐக்கியத்தின் 7 பேர் கொண்ட குழுவினரால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

ரூ. 3 லட்சம் நிதி உதவியளித்து இந்த ஆலயத்தைக் கட்ட உதவிய நெகேமியா ஆலயக் கட்டுமானக் குழுவினருக்காத் தேவனைத் துதிக்கிறோம். கர்த்தர் தாமே அவர்கள் ஊழியங்களையும், குடும்பங்களையும் ஆசீர்வதிப்பாராக!

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2013ம் ஆண்டிற்குள் 100 ஆலயங்கள் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!!**

## உங்கள் சகோதரனிடமிருந்து....



*கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!*

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். உங்களுடன் இந்த ஜூன் மாத மலருடன் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த மே மாதத்தில் 3 மாநிலங்களிலும் சுமார் 600க்கும் அதிகமான கிராம சபைகளில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், இயக்குனர்கள் 1004 பேர்கள் மூலமாக 30,000க்கும் அதிகமான ஆதிவாசி மாணவர்கள் 10 நாட்கள் நடந்த CBC (VBS) வகுப்புகளில் பங்கு பெற்றார்கள். **"இயேசு என் நண்பர்"** என்ற தலைப்பில் கொடுக்கப்பட்ட சத்தியத்தின் மூலமாக ஆயிரமாயிரம் சிறுவர்கள் தேவனை ஏற்றுக்கொண்டு, கிறிஸ்துவில் வளர்ந்து நிலைத்திருக்கவும் தேவன் கிருபை தந்தார். இதற்காக உழைத்த தேவ பிள்ளைகள் மற்றும் ஜெபித்து, காணிக்கை அனுப்பி உதவி செய்த உங்களையும் உங்கள் சந்ததியையும் தேவன் அதிகமாக ஆசீர்வதிப்பாராக!

பணித்தளங்களில் தொடர்ந்து புதிய ஆத்துமாக்கள் புதிய சபை கூடுதல்கள், புதிய ஊழியர்களைத் தேவன் தந்து கொண்டே இருக்கிறார். மட்டுமன்றி 26 இடங்களில் ஆலயக் கட்டுமானப் பணி தொடர்கிறது. வெள்ளிக்கிழமை தோறும்12 இடங்களில் நற்செய்திக் கூட்டங்கள் நடைபெறுகிறது. விரைவில் 10 லட்ச ஆத்துமாக்கள் தேவனண்டை வழி நடத்தப்படுவார்கள்.

குறிப்பாக பீல் ஆதிவாசி மாணவர்களுக்கான கல்வியறிவுப் பணிக்காக ஜெபியுங்கள். சுமார் 1000 மாணவர்களுக்கு பள்ளிகூட புத்தகங்கள், நோட்புக், பேக் மற்றும் சுமார் 200க்கும் அதிகமான மாணவர்களுக்கு பள்ளிக் கட்டணம் போன்றவற்றிற்காக உதவி செய்ய வேண்டும். அதற்காக குறைந்தது **ரூ. 6 லட்சங்கள்** தேவைப்படுகிறது. குழந்தை ஆதரவாளர்கள் மட்டுமன்றி மிஷனெரிகளைத் தாங்குவோர் உங்கள் மிஷனெரிப் பிள்ளைகளின் கல்விப் பணிக்காகக் குறைந்தது ஒரு மாணவருக்கு ரூ. 500 வீதம் அனுப்பி உதவி செய்து தேவ ஆசீர்வாதம் பெற்றுக் கொள்ள வேண்டுகிறேன். அதற்கு மேலாக சுமார் 200 மாணவர்கள் குறிப்பாக நம் சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் +1, +2 மற்றும் கல்லூரி மேற்படிப்பிற்காக கிராமங்களை விட்டு வெளியே வந்து பயில வேண்டியதுள்ளது. அவர்களுக்கு வருடத்திற்கு ரூ.20,000 முதல் ரூ. 30,000 வரை நிதி உதவி தேவைப்படுகிறது. விபரங்களை உள்ளே பிரசுரித்து உள்ளோம். அடுத்த இளைய தலைமுறையைக் கிறிஸ்துவுக்காக உருவாக்க முன்வாருங்கள்.

கடந்த மாதம் மற்றும் Madras Christian College, High School லிலிருந்து அன்பான ஆசிரியர்கள், **Mrs. Anitha, Mrs. Christina, Mrs. Christina Prince Mrs. Beula** ஆகியோர் வந்து ஆதிவாசி மாணவர்களுக்காக சிறப்பு ஆங்கிலப் பயிற்சி முறைமையை 1 வாரம் நடத்திக் கொடுத்தது மிக ஆசீர்வாதமாக அமைந்தது. அவர்களை அனுப்பி வைத்த பள்ளி முதல்வர்கள் **சகோ. G.J. மனோகர்** மற்றும் **சகோதரி. ரேவதி போன்ஸ்** அவர்களுக்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம்.

தேவ கிருபையால் நம் ஊழியங்களை தேவன் வர்த்திக்கப்பண்ணுகிறபடியால் புதிய ஆதரவாளர்கள் 1000 பேர்கள் உடனடியாகத் தேவை. குறிப்பாக அனைத்து ஊழியங்களை நடத்திச் செல்ல எல்லா பணித்தள நிகழ்ச்சிகளுக்காக மாதம் ரூ. 500 அல்லது ரூ. 1000 ஜெபித்து உதவும் குடும்பங்கள், சபைகள் எழும்ப ஜெபியுங்கள். கர்த்தர் ஏவினால் ஷாலோம் ஊழியங்களை அறிமுகம் செய்யவும் உங்கள் வட்டாரத்தில் உள்ள மிஷனெரிப் பாரம் உள்ளவர்களிடம் நிதி உதவியை சேகரித்து அனுப்பி ஷாலோம் பிரதிநிதியாக செயல்பட முன்வாருங்கள்.

தேவனுக்குச் சித்தமானால் ஜுலை 1ம் தேதி முதல் ஷாலோம் மருத்துவப் பணிகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளோம். நம் ஊழியத்தையும், பீல் மக்களையும் அதிகம் நேசிக்கும் அன்பு Dr. Inba Kumar அவர்கள் ஜுலை 1ம் முதல் மருத்துவமனைக்கு அர்பணித்து முழுவதுமாக பணிபுரிய வருகிறார்கள். அவருடன் இணைந்து ஆலோசனை வழங்கும் Dr. Abel, Dr.Mrs.Jolly Abel, அவர்களுக்காக தேவனை துதிக்கிறோம். மருத்துவப் பணிகளுக்காக Dahod IP Missionஐ சேர்ந்த Hamiton Hospital கட்டிடங்களைப் பயன்படுத்த அனுமதி கேட்டுள்ளோம். விரைவில் தடைகள் இன்றி அனுமதி கிடைக்கவும் மற்ற மருத்துவப் பணியாளர்கள், மருத்துவ சாதனங்கள் தேவையான மருந்துகள் மற்றும் நடத்திச் செல்ல நிதி உதவி கிடைக்கும் படியாக ஜெபியுங்கள். குறிப்பாக மருத்துவக் கட்டிடங்களின் பராமரிப்புக்காக குறைந்தது 10 இலட்சங்கள் தேவைப்படுகிறது. தேவன் தாமே அற்புதங்களைச் செய்யவும், பல்லாயிரம் ஜனங்கள் நல்ல மருத்துவ உதவி பெற்றுக் கொள்ளவும் ஜெபியுங்கள்.

1991 ஜீன் 1 முதல் அற்பமாய் ஆரம்பிக்கப்பட்ட ஷாலோம் ஊழியம் கர்த்தருக்குச் சித்தமானால் 2013 ஜீலை 1ம் தேதி முதல் 22 வருடங்களை முடித்து 23ம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறோம். 23,24,25ம் ஆண்டு முடிவிற்குள் அதாவது 25 ஆண்டுகளில் பீல் மக்கள் மத்தியில் ஊழியம் செய்து மிகப்பெரிய எழுப்புதலை எதிர் நோக்கி உள்ளோம். உங்கள் ஊக்கமான ஜெபங்கள் மற்றும் உற்சாகமான காணிக்கைகளை தவறாது அனுப்பித் தாங்குங்கள்.

ஜுன் மாதத்தில் பிரவேசிக்கும் நம்மை தேவன் ஆசீர்வதிப்பாராக! இவ்வருடம் **“உன் சந்ததி மேல் என் ஆவியையும் உன் சந்தானத்தின் மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்”** (ஏசா. 44:3) என்ற வாக்குதத்தத்தின்படி தேவன் அற்புதங்களைக் கட்டாயம் செய்வார்.

தூத்துக்குடி அலுவலகப் பணிகள், குஜராத் பணித்தள அலுவலகப் பணிகள் மற்றும் முன்னேற்றப் பணிகளுக்காக ஊழியத்தில் துணை நின்று உதவும் அனைத்து ஊழியர்களுக்காக ஜெபியுங்கள். ஷாலோம் ஊழிய தரிசனப்பணியை நேசித்து ஜெபித்து தாங்கும் உங்கள் யாவரையும் தேவன் அதிகமாக ஆசீர்வதிப்பாராக!

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*



(பேராயர் **V.** தேவதாஸ்)

**என்னுடன் தொடர்பு கொள்ள**
**09377445468**

# தேவ ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்!

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

**"உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களுக்கு சுதந்தரிக்கக் கொடுக்கும் தேசத்தை நீங்கள் சுதந்தரித்துக் கொள்ளும்படிக்கு இன்னும் மூன்று நாளைக்குள்ளே இந்த யோர்தானைக் கடந்து போவீர்கள் என்று சொல்லச் சொன்னான்".** (யோசுவா: 1: –11)

தேவனாகிய கர்த்தர் தம் சொந்த ஜனமாகிய இஸ்ரவேல் ஜனங்களை 400 வருட எகிப்தின் அடிமைத்தனத்தில் இருந்து விடுவிக்கும்படி தன் தாசனாகிய மோசேயின் மூலமாக, மாபெரும் விடுதலையைக் கட்டளையிட்டார். அது மட்டுமல்லாமல் 40 வருடங்கள் வனாந்திரப் பாதையிலே 6 லட்சத்துக்கும் அதிகமான இஸ்ரவேல் ஜனத்தாரின் குடும்பங்களை பலத்த கரத்தினாலும் ஓங்கிய புயத்தினாலும் வழிநடத்தியபின், மோசேயின் காலம் நிறைவேறின போது தேவன் தன் சித்தத்தின்படி யோசுவாவின் மூலம் தேசத்தை சுதந்தரித்து, இஸ்ரவேல் ஜனங்களுக்கு அதைப் பங்கிடவும் தெரிந்து கொண்டார்.

யோசுவாவின் வாழ்க்கையில் நடைபெற்ற ஊழியம் இன்று வாழும் நமக்கும் நம் ஊழியங்களுக்கும் சவாலாகவும் சாட்சியாகவும் அமைந்துள்ளது. ஏனெனில் நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும், நம்முடைய குடும்ப வாழ்க்கையிலும், சபை வளர்ச்சிப்பணிகளிலும் நமக்கு தேவன் கொடுத்த ஊழியத்தின் பாதையிலும் யோசுவாவைப் போல சுதந்தரித்துக் கொள்ளும்படியாக அழைக்கப்பட்டிருக்கிறோம்.

## சுதந்தரித்துக் கொள்ளும் ஆசீர்வாதம் தேவனிடத்திலிருந்து வருகிறது

யோசுவா 1 : 2 – ஐ வாசித்துப்பாருங்கள். முதலாவது தேவன் யோசுவாவினிடத்திலே இஸ்ரவேல் புத்திரருக்கு, **"நான் கொடுக்கும் தேசத்திற்குள் போங்கள்"** என்றார். எனவே சுதந்தரித்துக் கொள்ளும் ஆசீர்வாதம் தேவனுடைய கரத்திலிருந்து வருகிறது. தேவன் தம்முடைய ஜனங்களுக்குக் கொடுக்க தீர்மானிக்கும் ஆசீர்வாதங்களுக்கு விரோதமாய் யார் எழும்பக்கூடும்?

**இரண்டாவதாக,** யோசுவா 1 : 3 ஐ வாசிக்கும் போது, நான் மோசேக்குச் சொன்னபடி **"உங்கள் காலடி மிதிக்கும் எவ்விடத்தையும் உங்களுக்குக் கொடுப்பேன்"** என்றார். எனவே தேவ ஜனங்கள் விசுவாசத்துடன் அடி எடுத்து வைக்கும் ஒவ்வொரு காரியங்களையும் தேவன் வாய்க்கப்பண்ணுகிறார்.

**மூன்றாவதாக,** யோசுவா. 1: 6 ன் படி **"இந்த ஜனத்தின் பிதாக்களுக்கு நான் கொடுப்பேன் என்று ஆணையிட்ட தேசத்தை நீ இவர்களுக்கு பங்கிடுவாய்"** என்று சொல்லப்பட்டுள்ளது. ஏனெனில், அவர் வாக்குத்தத்தம் பண்ணினவரும், வாக்கு மாறாதவருமாவார். ஆபிரகாம், ஈசாக்கு யாக்கோபு ஆகிய முற்பிதாக்களுக்கு தேவன் தந்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற வல்லவராய் இருக்கிறார்.

ஆகவே, நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையிலும் குடும்ப வாழ்க்கையிலும், ஊழியப் பாதையிலும் தேவன் நமக்கு கொடுக்கும் ஆசீர்வாதங்களை நோக்கி விசுவாசத்துடன் அடி எடுத்து வைத்து, வாக்குதத்தங்களைப் பிடித்து அவைகளை சுதந்தரித்துக் கொள்வோம். மட்டுமல்ல யோசுவா கர்த்தருக்காக எதைச் செய்தாலும் அதை மனப்பூர்வமாகச் செய்தான். தன்னுடைய தாசனாகிய மோசே எவைகளையெல்லாம் செய்யும்படியாக கட்டளையிட்டானோ அவைகளை மனப்பூர்வமாகச் செய்தான். எபே. 6:8 **“மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள்”**

யோசுவா தன் ஊழியம் ஆரம்பித்தபோது, (யோசு. 1:1) கர்த்தராகிய தாசன் மோசே மரித்த பின்பு கர்த்தர் **“மோசேயின் ஊழியக்காரனான நூனின் குமாரனாகிய யோசுவா”** என்று யோசுவாவை அழைக்கிறார். முதலாவது யோசுவா கர்த்தருடைய தாசன் மோசேக்குக் கிழாக அவருடன் இருந்து உண்மையாக ஊழியங்களை நிறைவேற்றி அவருக்கு தேவன் முழு பொறுப்பை தந்து, ஊழியங்களை நடத்திச் செல்ல உதவியாகத் தெரிந்துக் கொண்டார். இப்படியாக ஊழியத்தை நிறைவேற்றும் போது யோசுவா (யோசுவா 24:29) ம் வசனத்தில் தேவன் யோசுவாவை பற்றி : **“ இந்தக் காரியங்கள் நடந்த பின்பு, நூனின் குமாரனாகிய யோசுவா என்னும் கர்த்தருடைய ஊழியக்காரன் நூற்றுப்பத்து வயதுள்ளவனாய் மரணமடைந்தான்”.** இதுவரை மோசேயின் ஊழியக்காரன் என்று அழைக்கப்பட்டார். அவன் ஊழியம் முடிவடையும் போது கர்த்தருடைய ஊழியக்காரன் என்று தேவன் அழைத்தார்.

யோசுவாவைப் போல தேவனுடைய ஆசீர்வாதங்களை நாம் சுதந்தரிக்க வேண்டுமானால் தேவன் நம்மை எந்த இடத்தில் எப்படிப்பட்ட பொறுப்போடு வைத்தாரோ அதில் உண்மை உள்ளவர்களாக ஊழியம் செய்ய வேண்டும். அப்படி செய்யும் பொழுது தேவன் நம்மைக் குறித்து **“இவன் கர்த்தருடைய ஊழியக்காரன், என்னுடைய ஊழியக்காரன்”** என்று சாட்சி கொடுப்பார். நானும் என் மனைவி **வஹிதாவும்** ஊழியத்திற்கு வந்த போது உடனடியாக தேவன் ஷாலோம் ஊழியத்தை தரவில்லை. நாங்கள் இரண்டு பேரும் சுமார் 10 வருடங்கள் இந்திய மிஷனெரி சங்கத்திலும், நண்பர் சுவிசேஷ குழுவிலும் தேவனால் அனுப்பபட்டு உண்மையாக தேவனுக்கும் அவர் தந்த ஸ்தாபனத்திற்கும் ஊழியம் செய்தோம். அதன் பின் தேவன் எங்களது உண்மையான ஊழியத்தைக் கண்டு 1991 ம் ஆண்டு ஷாலோம் ஊழியத்தை கொடுத்து வறுமையிலிருந்து படிப்படியாக உயர்த்தி இன்றைக்கு ஷாலோம் திருமண்டலத்தைக் கொடுத்து தேவ நாமத்தை மகிமைப்படுத்தினார். ஏற்றக் காலத்தில் தேவன் உங்களையும் கட்டாயம் உயர்த்துவார்.

**இரண்டாவதாக** யோசுவா தன் தலைவனான மோசேயினிடத்தில் காணப்பட்ட நல்ல ஆவிக்குரிய காரியங்களைக் கற்றுக் கொண்டு அதன்படி நடக்க தன்னை ஒப்புக் கொடுத்தார். (யாத்: 33.11) **“ஒருவன் தன் சிநேகிதனோடே பேசுவது போல கர்த்தர் மோசேயோடே முகமுகமாய்ப் பேசினார். பின்பு அவன் பாளையத்துக்குத் திரும்பினான். நூனின் குமாரனாகிய யோசுவா என்னும் அவனுடைய பணிவிடைக்காரனாகிய வாலிபன் ஆசரிப்புக் கூடாரத்தை விட்டுப் பிரியாதிருந்தான்”.** மோசே எப்போழுதும் தேவனோடு உறவாடி தேவனுடைய பிரசன்னத்தையும், தேவனுடைய வழி நடத்துதலையும் பெற்றுக் கொண்டு வாழ்ந்தவன்.

அந்தத் தேவ மனிதனின் உன்னதமான அனுபவங்களைத் தானும் வாஞ்சித்தபடியினால் தேவனோடு கூட யோசுவாவும் உறவாடினான். தேவனுடைய பிரசன்னம் எப்போதும் யோசுவாவின் வாழ்விலும், ஊழியத்திலும் காணப்பட்டது. நம்முடைய தேவன் மனிதர்களோடு உறவாடுகிற தேவன். ஆபிரகாமை தன் சிநேகிதன் என்று அழைத்து, சோதோம் கொமாரோ பட்டணத்தின் அக்கிரமங்களையும், நியாயத்தீர்ப்புகளையும் பேசினார்.

மோசேயுடன் கூட முகமுகமாய் ஒரு சிநேகிதனிடத்தில் பேசுவதைப்போல பேசினார். நாமும் தேவனுடைய பிரசன்னத்திற்காகக் காத்திருக்கும்போது தேவன் நாம் சுதந்தரித்துக்கொள்ள வேண்டியவைகளை பெற்றுக்கொள்ளும்படியான கிருபையைத் தருவார். மரியாளைப் போல நாம் இயேசு கிறிஸ்துவின் பாதத்தில் அவருடைய வார்த்தைக்காக காத்திருக்கும் போது தேவ பிரசன்னத்தால் நிறைக்கப்படுகிறோம்.

**மூன்றாவதாக,** யோசுவா வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதங்களைச் சுதந்தரித்துக்கொள்ள யுத்த வீரராகக் காணப்பட்டான். அவனுடைய கைகளில் எப்போழுதும் பட்டயம் இருந்தது. தேவன் தரும் ஆசீர்வாதங்களுக்கு விரோதமாக நிற்கும் தடைகள், எதிர்ப்புகள், சத்துருவின் போராட்டம் போன்றவைகளுக்கு விரோதமாக தேவ நாமத்தில் யுத்தம் செய்து ஆசீர்வாதங்களைச் சுதந்தரித்துக் கொண்டான். தேவன் சோம்பேறிகளை ஒரு போதும் நம்பவும் மாட்டார், பயன்படுத்தவும் மாட்டார். உதாரணமாக, மோசே, தாவிது, எலிசா, பேதுரு இவர்களை ஆண்டவர் ஊழியத்திற்கு அழைத்த போது இவர்கள் யாவரும் உண்மையான வேலை செய்து கொண்டிருந்தனர்.

யோசுவா தன் கையில் உள்ள பட்டயத்தினாலே அமலேக்கியர், பெலிஸ்தியர் மேலும் ஆசீர்வாதத்திற்கு விரோதமாக இருந்த 31 இராஜாக்களையும் பட்டயத்தினால் அழித்து தேசத்தை சுதந்தரித்துக் கொண்டான். இன்றைக்கு நாமும் நம்முடைய சத்துருவின் போராட்டங்களை ஜெயிப்பதற்கு தேவன் நமக்குப் பட்டயத்தையல்ல, ஆவியின் பட்டயமாகிய தேவ வசனத்தை நமக்குத் தந்திருக்கிறார். தேவ ஜனங்களாகிய நாம் தேவ ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்கிறவர்களாக மாறுவோம்.

யோசுவா: **1 . 8 "இந்த நியாயப்பிரமாண புஸ்தகம் உன் வாயைவிட்டுப் பிரியாதிருப்பதாக; இதில் எழுதியிருக்கிறவைகளின்படியெல்லாம் நீ செய்யக் கவனமாயிருக்கும்படி, இரவும் பகலும் அதைத் தியானித்துக் கொண்டிருப்பாயாக; அப்பொழுது நீ உன் வழியை வாய்க்கப்பண்ணுவாய், அப்பொழுது புத்திமானாயும் நடந்துகொள்ளுவாய்** ".

கர்த்தருடைய வார்த்தையில் வல்லமையுண்டு அபிஷேகம், விடுதலை, பரிசுத்தம் போன்றவைகளுண்டு. இன்னும் மேலான ஆசீர்வாதங்களுண்டு, குறிப்பாக, தேவன் நமக்குக் கொடுத்த இயேசுக்கிறிஸ்துவின் நற்செய்தியில் விலையேறப்பெற்ற வல்லமையுண்டு. எந்த மனிதனையும் கிறிஸ்துவுக்குள்ளாக மறுரூபமடையச் செய்யும். ஒவ்வொரு தேவனுடைய சபையும், விசுவாசிகளாலும், மூப்பர்களாலும், ஊழியர்களும் குறிப்பாக தேசத்தை சுதந்தரித்துக் கொள்ளஅழைக்கப்பட்ட மிஷனெரிப் பணியாளர்களும் தேவனுடை வசனத்தை வாசித்து அதன்படி நடக்கும்போது தேவன் நமக்கு பாரத தேசத்தை சுதந்திரமாகக் கட்டளையிட்டு, ஆத்துமாக்களையும் திரள் கூட்டமாகத் தருவார்.

**கடைசியாக, "யோசுவா வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஆசீர்வாதத்தை சுத்திகரித்துக் கொள்ள தேவனுடைய ஞானத்தின் ஆவியால் நிரப்பப்பட்டிருந்தான். மோசே நூனின் குமாரனாகிய யோசுவாவின்மேல் தன் கையை வைத்தபடியினால் அவன் ஞானத்தின் ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தான்."** இஸ்ரவேல் புத்திரர் அவனுக்குக் கீழ்ப்படிந்து, கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே செய்தார்கள். (உபா34:9) தேவன் கொடுத்த இந்த அபிஷேகத்தினால் யோசுவா முழு இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தி கானான் தேசத்தை சத்துருக்களின் கையிலிருந்து மீட்டு சுதந்தரித்து தேவ ஜனங்களுக்கு பங்கிட்டுக் கொடுத்தான்.

தேவனுடைய வல்லமையான இந்த அபிஷேகம் யோசுவாவுக்குள் இருந்தபடியால் இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன் செல்ல முடியாதபடி இந்த யோர்தான் நதியைக் கடந்து உடன்படிக்கைப் பெட்டியை சுமக்கும் ஆசாரியர்கள் அடியெடுத்து வைத்தபொழுது யோர்தான் உலர்ந்த தரை வழியாக கடந்தார்கள். அப்போது கர்த்தர் அற்புதங்களைச் செய்தார்.

**இரண்டாவதாக,** மிகப்பெரிய சத்துருவின் எரிகோவைக் கண்டு ஆசீர்வாதத்தை சுதந்தரித்துக் கொள்ள முடியாதபடி மிக பெரிய கோட்டையாய் நின்றபோது ஏழு ஆசாரியர்களின் ஏழு எக்காளங்களின் துதிகளுடன் ஏழு நாட்கள் சுற்றிவந்த போது, தடையாக நின்ற எரிகோ கோட்டை இடிந்து விழுந்தது.

**மூன்றாவதாக,** தேசத்தை ஆளுகை செய்த மிகப் பெரிய பெலவான்களான 31 ராஜாக்களை குறிப்பாக 5 ராஜாக்கள் ஒன்று சேர்ந்து சத்துரு வெள்ளம் போல வந்த போது சூரியனையும், சந்திரனையும் நிற்க செய்தது. சத்துருக்கள் மீது கல்மழையைவரச் செய்த கர்த்தரையே முன்பாக வைத்து யுத்தங்களில் ஜெயத்தைப் பெற்று முழு கானான் தேசத்தை சுதந்தரித்துக் கொடுத்தான்.

கிறிஸ்துவுக்கு மிக அன்பானவர்களே நாம் தேவனுடைய பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படும். போது உடன்படிக்கையின் ஆசீர்வாதமான தேவ பிரசன்னத்தினால் யோர்தான் போன்ற தடைகளை கடந்து சென்று தேவன் உங்களுக்கு வைத்த ஆசீர்வாதங்களை சுதந்தரித்து கொள்ளுங்கள். அதே தேவனுடைய அபிஷேகத்தின் வல்லமையோடு கூட உங்களுக்கு விரோதமாய் நிற்கும் எரிகோ கோட்டைகளை துதி ஆராதனை மூலமாக உடைத்தெரிந்து உள்ளே சென்று ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக் கொள்ளலாம்.

**கடைசியாக,** தேவனிடத்திலிருந்து யோசுவாவின் காலத்தில் நடந்தது போல இயற்கைக்கும் மேற்பட்ட அற்புதங்களை நம்முடைய தலைமுறையில் பாரத தேசம் இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் படியாக தேசத்தை சுதந்தரித்துக் கொள்ள தேவன் நமக்கு கிருபை செய்வாராக! ஆமென்.

**"அப்படியே யோசுவா, கர்த்தர் மோசேயினிடத்தில் சொன்னபடியெல்லாம் தேசமனைத்தையும் பிடித்து, அதை இஸ்ரவேலருக்கு, அவர்கள் கோத்திரங்களுடைய பங்குகளின்படியே, சுதந்தரமாகக் கொடுத்தான்".** யோசுவா 11 : 23

# நெகேமியா ஆலய கட்டுமான ஐக்கியம், கோவில்பட்டி குழுவினரின் பணித்தள வருகை

நெகேமியா ஆலய கட்டுமான ஐககியத்தின் சார்பாக, ஷாலோம் பணித்தளஙகளைப் பார்வையிடும்படியாக **Dr. தாசன், சகோதரி. அன்னம்மாள், சகோ. P. தங்கச்சாமி, சகோதரி. மனோரஞ்சிதம், சகோ. D. ஜெயசீலன், சகோ. R. பொன்னு பாண்டி, சகோ. E.S.T.G. கரம்சந்திரன்** ஆகிய ஏழுபேர் கொண்ட குழுவாக குஜராத் சென்றோம். தேவ கிருபையால் 18 ம் தேதி காலையில் குஜராத் தாகோத்தில் உள்ள ஷாலோம் பணித்தள அலுவலகத்தை பார்வையிட்டு, ஒவ்வொரு பொறுப்புகளையும் அந்த பொறுப்பாளர்கள் சிறப்பாக நிறைவேற்றுவதைக் கண்டு தேவனை துதித்தோம். அதன் பின்பு அனைவரும் ஜெபித்து குஜராத்தில் தாகோத் அருகிலுள்ள தெல்சர் கிராம ஆலயத்திற்குச் சென்று **போதகர் நவல் பில்வாள்** அவர்களை சந்தித்தோம். பிசாசு பிடித்து, அந்தகாரத்தில் வாழ்ந்த அவர்களை தேவன் தூக்கி எடுத்து மிக அழகான ஆலயம் மற்றும் வீட்டை தேவன் தந்து 100 க்கும் அதிகமான விசுவாசிகள் குடும்பங்களைத் தேவன் கொடுத்ததை அறிந்து தேவனை துதித்தோம். அதன்பின் **சகோ. ஜெயராஜ்** அவர்கள் தலைமையிலும், **சகோ. திவாகர்** அவர்கள் தலைமையில் ஒரு குழுவுமாக இரு குழுக்களாகப் பிரிந்து பணித்தளங்களைக் காணச் சென்றோம்.

**சகோ. ஜெயராஜ்** அவர்களுடன் சென்ற குழுவில் குஜராத்தில் பாரேவா கிராம ஆலயத்தை கண்ட பின்பு நெகேமியா ஆலயக் கட்டுமானக் குழு மூலமாக கட்டிக் கொடுக்கப்பட்ட கொலானா கிராம ஆலயத்தைக் கண்டு தேவனை துதித்தோம். பின்பு ஹிரோலா ஷாலோம் கிராம ஆலயத்தையும், அங்கு நடைபெறும் 300 சிறுவர்களுக்கான Compassion Project ஐயும் காண தேவன் கிருபை செய்தார்.

தொடர்ந்து சுமார் 50 கிலோமீட்டர் தொலைவில் இராஜஸ்தான் சென்று கும்புரா தேவாலயத்தை காணவும், அங்கு கூடியிருந்த விசுவாசிகளுக்கு தேவனுடைய வார்த்தையை வழங்கவும் தேவன் கிருபை தந்தார். அவர்கள் ஆவியில் நிறைந்து பாடல்களைப் பாடி ஆராதித்தது ஆசீர்வாதமாக இருந்தது. அங்கிருந்து கொய்கா கிராம ஆலயத்தைக் காணவும், கொய்கா கிராமத்தில் ஷாலோம் ஊழியர் வளர்ச்சிக்காக கட்டப்படுகிற மிகப் பெரிய Prayer Hall கட்டுமானப் பணியைக் காண தேவன் உதவி செய்தார். ராஜஸ்தானில் சுமார் 250 ஊழியர்களும் 300 சபைகளும் இருக்கிறபடியால் இதைப் போல் கட்டிடங்கள் இன்னும் எழுப்பப்பட வேண்டும்.

**சகோ. திவாகர்** அவர்கள் தலைமையில் குஜராத்தில் உள்ள பணித்தள ஆலயங்களைக் காணும்படியாக இரண்டாவது குழுவினர் அழைத்து செல்லப்பட்டார்கள். தாகோத் தாலுக்காவில் நகராலா, பாண்டிக்கேடி, வரம்கேடா, கிராமத்தில் கட்டப்பட்ட 2 கிராம ஆலயங்களையும், அதன் போதகர்கள், மூப்பர்களை சந்தித்தோம். இதனையடுத்து தான்பூர் தாலுக்காவில் பாட்டன்பூரா ஆலயத்தில் நடைப்பெற்ற சிறப்பு ஆராதனையில் பங்கு பெற்றோம். ஸ்தல ஊழியர்கள் உற்சாகத்துடன் எங்களை வரவேற்றார்கள். வாழ்த்து செய்தியும், தேவனுடைய வார்த்தையையும் பகிர்ந்து கொண்டோம். பாடல்களை பாடி ஆராதனை செய்த போது தேவ பிரசன்னம் இறங்கி வந்ததைக் கண்டோம். அங்கிருந்து 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கங்கேலா ஷாலோம் ஆலயத்திற்குக் கடந்து வந்தோம். அது மிக அழகான பெரிய ஆலயம். இங்கு சபை நிறைய விசுவாசிகள் காணப்பட்டனர். **பேராயர். தேவதாஸ்** அவர்கள் எங்களுக்கு முன்பாகச் சென்று சிறப்பு கூட்டம் நடத்திக் கொண்டிருந்தார்கள். ஞாயிற்றுக் கிழமை அல்லாத நாட்களிலும் ஆலயம் நிரம்பி வழிவதைத் கண்டு ஆச்சரியப்பட்டோம்.

19 ம் தேதி காலையில் ஜெபித்து விட்டு அனைவரும் இணைந்து 2 வாகனங்களில் மத்தியப்பிரதேச ஆலயங்களுக்குக் கடந்து வந்தோம். சுமார் 20 கிலோ மீட்டர் மலைகள், குன்றுகள், காடு மேடுகள், கடந்து சென்று பார்த்த போது, பெரும்பாலான கிராமங்களில் போக்குவரத்து, மின்சாரம், கல்வி, குடிநீர், பாதுகாவல் இப்படி எந்த வசதிகளும் இல்லாமல் வாழ்ந்து வருவதை கண்ட போது எங்கள் மனம் உருகியது. அந்த வழியாக ரூப்பாக்கேடா, நவாப்பாடா, காலாகேத், மாங்லி, வேந்திக்கேடா, அந்தவேலியா ஆகிய கிராம ஆலயங்களையும், போதகர்களையும், மூப்பர்களையும் சந்திக்க தேவன் கிருபை செய்தார்.

இவ்வளவு உள்ளடங்கிய கிராமங்களை 20 வருடங்களுக்கு முன்பாக எப்படி **சகோ. தேவதாஸ்** அவர்களுடைய குடும்பம் பணி செய்திருப்பார்கள். தியாகத்துடன் எவ்வளவு கஷ்டங்களை அநுபவித்திருப்பார்கள் என்று நினைத்து தேவனை துதித்தோம். அன்று மாலை 30,000 சிறுவர்களுக்கான CBC திட்டத்திற்காக நடைபெற்றுக்கொண்டிருந்த CBC ஆசிரியர்கள், இயக்குநர்கள் பயிற்சியைக் கண்டோம். 3 மாநிலத்தில் சுமார் 1004 பேர் கலந்து கொண்டார்கள். அவர்கள் எவ்வளவு உற்சாகத்தோடு சிறுவர் ஊழியத்திற்கு வந்திருக்கிறார்கள் என்பதை கண்டு உள்ளம் மகிழ்ந்தது. சில இடங்களில் பெண்கள் ஜக்கியங்களில் கூடி ஆராதிக்கும் கூட்டங்களில் கலந்து கொண்டோம். சுதேச ஊழியர்களால் நடத்தப்பட்ட சுகமளிக்கும் ஆராதனையில் அநேக ஆண்டவரை அறியாத மக்கள் கலந்து கொண்டு தேவ வல்லமையை அறிந்து கொண்டது கண்கொள்ளாத காட்சியாக இருந்தது.

அதன் பின்பாக நதிகளையும், குன்றுகளையும் கடந்து சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தேவாலயத்தை பிரதிஷ்டை செய்ய மேந்திகேடா கிராமத்திற்கு வந்து சேர்ந்தோம். விசுவாசிகள் அனைவரும் வெயிலில் மேளதாளத்தோடு காத்துக் கொண்டிருந்தார்கள். பிரதிஷ்டை ஜெபத்தை **பேராயர். தேவதாஸ்** அவர்கள் ஏறெடுக்க, நெகேமியா குழுவின் துணைத் தலைவர் **D. ஜெயசீலன்** அவர்கள் ரிப்பன் வெட்டி ஆலயத்தை திறந்து வைத்தார்கள். **திரு. கரம்சந்திரன்** அவர்கள் கல் வெட்டை திறந்து வைத்தார்கள். பின்பு விசுவாசிகளோடு தேவனை ஆராதித்து தேவனை மகிமைப்படுத்தினோம். எங்களுக்கு உற்சாகமான கலாச்சார வரவேற்பு கொடுத்தனர். அனைவரும் வாழ்த்து செய்திகளையும் எங்கள் ஊழியங்களைக் குறித்தும் அறிமுகப்படுத்தி பகிர்ந்து கொண்டோம். **பேராயர். தேவதாஸ்** அவர்கள் ஆலயம் என்ற தலைப்பில் தேவனுடைய செய்தியை பகிர்ந்து கொண்டார். ஆராதனை முடிவில் அனைவருக்கும் உணவு பரிமாறப்பட்டது.

அதன் பின்பு அருகிலுள்ள மத்தியப்பிரதேசத்தில் முக்கியமான ஆலயமான அந்தர்வேலியா ஆலயத்தைக் காண தேவன் உதவி செய்தார். பின்பு தாகூத் செல்லும் வழியில் ஆலயம் கட்டப்பட்ட அநேகக் கிராமங்களைக் கடந்து வந்தோம். இவை அனைத்திலும் பிஷப் அய்யா, அம்மா, பிள்ளைகள் மற்றும் ஊழியர்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயல்படுவதை நேரடியாகக் கண்டு கொண்டோம். அவர்கள் பீல் இன மக்கள் மீது காட்டும் அன்பும், அவர்கள் இரட்சிப்பிற்கும், நல்வாழ்விற்கும் வைத்திருக்கும் திட்டங்களைச் செயல்படுத்தும் வழி முறைகள் அனைத்தும் எங்களை மிகவும் கவர்ந்தது. 2020ம் ஆண்டிற்குள் 1 கோடி பீல் இன மக்கள் இரட்சிப்பிற்குள் வழிநடத்தப்பட தீர்மானித்து வேகத்துடன் செயலாற்றும் ஷாலோம் ஊழியத்தின் தரிசனம் நிறைவேற தொடர்ந்து இந்த ஊழியத்தை உற்சாகத்துடன் தாங்க உறுதி பூண்டுள்ளோம். நீங்களும் ஜெபித்து ஊழியத்தை தாங்கவும் ஆலயத்தை கட்டவும் முன்வாருங்கள்.

# நெகேமியா ஆலய கட்டுமான ஐக்கியம், கோவில்பட்டி - குழுவினரின் பணித்தள வருகை


மேளதாளங்களுடன் உற்சாக வரவேற்பு


மேந்திகேடா கிராம ஆலயத்தில் விசுவாசிகளுடன்


ஆலய பிரதிஷ்டைக்கான ஜெபம்


மேந்திகேடா கிராம ஆலய கல்வெட்டுத் திறப்பு


ஆலயத்தில் கலாச்சார வரவேற்பு


ஆலயத்தில் கூடியிருந்த விசுவாசிகள்


ஆலய பிரதிஷ்டையில் சிறப்பு விருந்து பரிமாறல்


வரம்கேடா (குஜராத்) கிராம ஆலயத்தின் முன்பு


கொலானா (குஜராத்) கிராம ஆலயத்தின் முன்பு

# ஷாலோம் மிஷனெரி தரிசனக் கூடுகை, தூத்துக்குடி - 05.05.2013




பாடல் மற்றும் ஆராதனை வேளையை நடத்தும்
ஹேவன்லி ஜாய் குழுவினர்



கலாச்சார நடனமாடி தேவனைப் பாடித் துதிக்கும்
நமது பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்கள்



சுதேச ஊழியர்களின் சாட்சிகளை மொழிபெயர்த்ததுடன்
பணித்தள செய்தியளிக்கும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்



தேவனுடைய வார்த்தையைப் பகிர்ந்து கொள்ளும்
பிஷப். V. தேவதாஸ் அவர்கள்




பணித்தளத்தைப் பார்வையிட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளும்
Dr. தாசன் மற்றும் சகோ. விஜய்சிங் அவர்கள்



10 சுதேச ஊழியர்கள் பிரதிஷ்டை ஜெபத்தை போதகர்கள்
ஊழியர்களுடன் நடத்தும் Rt. Rev. Dr. A. ஸ்டீபன் அவர்கள்



கூடியிருந்த தேவஜனங்களில் ஒரு பகுதி



ஆசீர்வாத ஜெபத்தை ஏறெடுக்கும்
Rev. எபனேசர் தேவராஜ் அவர்கள்

## `ôúXôm ª `ù]¬R¬N]d áÓûL- ç jÕdÏ¥5.5.2013

கர்த்தரின் மாபெரும் தயவால் கடந்த **5.5.2013** ஞாயிறு மாலை **6** மணிக்கு தூத்துக்குடி, புதுக்கிராமம் A.S.K.R திருமண மஹாலில் வைத்து மிஷனெரி தரிசனக் கூடுகை நடைபெற்றது. **சகோ. வின்ஸ்டன் பாலசிங்** அவர்கள் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்க, **சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ்** அவர்கள் ஆரம்ப ஜெபத்தினை ஏறெடுத்து, வரவேற்புரையாற்றினார்கள். பாடல் மற்றும் ஆராதனை வேளையை கோவில்பட்டி, **ஹெவன்லி ஜாய் ஊழியங்கள்** – குழுவினர் நடத்தினார்கள்.

இதனைத் தொடர்ந்து ஷாலோம் சுதேச ஊழியர்கள் தங்களது கலாச்சார நடனமாடி தேவனை மகிமைப்படுத்தினார்கள். தொடர்ந்து மிஷனெரிகள் தங்கள் சாட்சிகளைக் கூற **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் தமிழாக்கம் செய்தார்கள். குஜராத், இராஜஸ்தான் மற்றும் மத்தியப்பிரதேசத்திலிருந்து வந்திருந்த **10** மிஷனெரிகளையும் IPM தலைமை சபை போதகர் **Rev. Dr. A. ஸ்டீபன்** அவர்கள் ஜெபத்துடன் தேவ தாசர்கள் முன்நிலையில் பிரதிஷ்டை செய்தார். அதன்பின் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் பணித்தள செய்திகளைப் பகிர்ந்து கொண்டார்கள். **சகோ. சாம் குணசீலன்** மற்றும் **சகோ. டைட்டஸ்** அவர்கள் பணித்தள ஊழியங்கள் சம்பந்தமான வீடியோக்களை திரையிட்டுக் காண்பித்தார்கள்.

இதனைத் தொடர்ந்து நமது ஷலோம் ஊழியங்களின் எதிர்காலத்திட்டங்களைக் குறித்தும் தேவைகளைக் குறித்தும் நமது **பிஷப். தேவதாஸ்** அவர்கள் பகிர்ந்து கொண்டார்கள்.

**சகோ. தாசன்,** கோவில்பட்டி, **சகோ. விஜயசிங்** தூத்துக்குடி ஆகிய இருவரும் தங்களது பணித்தள அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். அதன்பின் **பிஷப். தேவதாஸ்** அவர்கள் தேவ செய்தியினை வழங்கினார்கள். நிறைவு ஜெபம் மற்றும் தேவ ஆசீர்வாத ஜெபத்தினை **Rev. எபனேசர் தேவராஜ்** அவர்கள் ஏறெடுத்தார்கள். இதில் அநேக தேவப் பிள்ளைகள் கலந்துக் கொண்டு ஷாலோம் ஊழியங்களைக் குறித்து அறிந்து, ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், கொடுக்கவும் தங்களை அர்ப்பணித்தார்கள். இந்தக் கூட்டத்தை ஆசீர்வாதமாக நடத்த கிருபை தந்த தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

**பிரதிஷ்டை செய்யப்பட்ட மிஷனெரிகள் மற்றும் அவர்களைத் தாங்குவோர் :–**

| | மிஷனெரிகள் | ஆதரவாளர்கள் |
|---|---|---|
| 1. | சகோ. மதூர்புரியா | சகோ. அந்தோணி – தூத்துக்குடி |
| 2. | சகோ. பாபுராம் மேடா | சகோ. ஆஸ்வால்டு – தூத்துக்குடி |
| 3. | சகோ. சேமா காமோடு | சகோதரி. ஞானம் சேகர் – தூத்துக்குடி |
| 4. | சகோ. இஸ்வர்லால் டின்டோடு | சகோ. தினகரன் – கோரம்பள்ளம் |
| 5. | சகோ. பக்குள்சந்திரா கே. காடா | சகோ. ஜோயல் ஆனந்த் – தூத்துக்குடி |
| 6. | சகோ. மிச்சல் பரியா | சகோ. பீட்டர் Y கோயில்ராஜ் –தூத்துக்குடி |
| 7. | சகோ. நரேஸ் மேடா | சகோ. Y. ராஜன் – தூத்துக்குடி |
| 8. | சகோ. தார்ஜி மேடா | சகோ. ராய்ஸ் – தூத்துக்குடி |
| 9. | சகோ. சுனில் R.ஜவ்கான் | சகோ. தனசிங் – தூத்துக்குடி |
| 10. | சகோ. ரம்சு மொகனியா | சகோ. வாசுதேவன் – தூத்துக்குடி |

இந்த மிஷனெரிகளைத் தாங்குகிறவர்களை தேவன் அதிகமாய் ஆசீர்வதிப்பாராக. இந்த 2013ஆம் ஆண்டு இறுதிக்குள் அதிகமான மிஷனெரிகள் பிரதிஷ்டை செய்யப்பட ஜெபிப்போம்.

# பணித்தளங்களில் தேவ அற்புதங்கள்!

## குஜராத் மாநிலம்

**சகோ. ரத்தன்சங் s. பார்மர்** **கால்சியா**

வனிதா என்ற சகோதரிக்கு ஜெபத்தின் மூலம் தேவன் சுகப்பிரசவத்தைக் கொடுத்தார்.

சந்துபேன் என்ற சகோதரி தீராத தலைவலியினால் அவதிப்பட்ட நிலையில் ஜெபித்த போது தேவன் விடுதலை கொடுத்தார்

**சகோ. வார்சிங் K. பார்மர்** **சிமாலியால்**

10 வயது நிரம்பிய சுனித்தா பேன் மலேரியா காய்ச்சலினால் அவதிப்பட்ட நிலையில், ஜெபக்கூட்டத்தில் கலந்து கொண்டு ஜெபித்தபோது தேவன் விடுதலை கொடுத்தார்

கேன்சர் வியாதியில் கஷ்டப்பட்ட வர்சிங்பாய் என்ற சகோதரர் 5லட்சம் ரூபாய்க்குமேல் செலவு செய்தும் சுகம் கிடைக்காமல் ஆலயத்திற்கு வந்து ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. கால்லு M. சங்காடா** **ரிட்டியா**

வாந்தி, வயிற்றுப் போக்கினால் கஷ்டப்பட்ட சுக்மா என்ற சகோதரிக்கு ஜெபத்தின் மூலம் கர்த்தர் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. கன்னு L. பாபூர்** **மால்வாசி**

சுகபாய் என்பவர் சரீரத்தில் அதிக பெலவீனம் ஏற்பட்டு மந்திவாதிகளை நாடியும் சுகம் கிடைக்கவில்லை. பல வைத்தியம் செய்தும் சுகவீனம் மாறவில்லை. இறுதியாக நமது சபைக்கு வந்து ஜெபித்த போது தேவன் சரீர சுகத்தைக் கொடுக்கவே இப்போது இவரின் குடும்பம் முழுவதும் ஆராதனைக்கு வருகிறார்கள்.

கற்பப்பையில் அதிக வலி ஏற்பட்டு அவதிப்பட்ட விலாள் என்ற சகோதரிக்கு ஜெபித்த போது தேவன் விடுதலையைக் கட்டளையிட்டார்.

## மத்தியப்பிரதேசம் மாநிலம்

**சகோ. சப்பூர் ககூரியா** **பத்ரா**

அடிக்கடி தலைச்சுற்றினால் கஷ்டப்பட்டுவந்த வஸ்னிபேன் சகோதரிக்கு ஜெபிக்கவே தேவன் சுகம் தந்தார்.

**சகோ. அமர்சிங் M. வசுனியா** **கத்தியாகாலி**

ஒரு வருடமாகப் பைத்தியம் பிடித்திருந்த வினோத் என்பவரை மந்தரவாதிகளிடம் கொண்டு சென்று பல ரூபாய் செலவழித்தும் குணமாகாமல் கடைசியில் இவருக்காக ஜெபித்த போது தேவன் நல்ல விடுதலையைக் கொடுத்தார்.

**சகோ. நர்சிங் R. கலார்** **காலியாவிரன்**

அசுத்த ஆவியின் பிடியில் சிக்கி அவதிப்பட்ட இம்சந்த்பாய் என்ற சகோதரர் விடுதலைக்காக வைத்தியர்கள், மந்திரவாதிகள் போன்றோரை நாடியும் சுகம் கிடைக்காமல் இறுதியில் இயேசுவை நம்பி ஜெபித்த போது பூரண விடுதலை கிடைத்தது.

பக்க வாதத்தினால் கை, காலில் பாதிப்பு ஏற்பட்டு அவதிப்பட்டுவந்த மக்துபேன் என்ற சகோதரி இயேசுவை நம்பி ஜெபித்தபோது தேவன் பூரண சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. கலியா L. பாபூர்** **பார்வாடா**

ஜோகடியா என்ற சகோதரர் 1 மாதமாக வயிறு வலியினால் கஷ்டப்பட்டு, மருந்துகள் சாப்பிட்டும் குணமாகாமல், ஜெபிக்கவே தேவன் சுகத்தைக் கொடுத்தார்.

## இராஜஸ்தான் மாநிலம்

**சகோ. கன்னு S. மாவுரா** **கலியமீடா**

நானாலால் என்பவர் நரம்பில் ஏற்பட்ட பிரச்சனையினால் கஷ்டப்பட்ட நிலையில் இயேசுவை விசுவாசித்து ஜெபித்த போது தேவன் அற்புத சுகம் கொடுத்தார்.

**சகோ. கலியா M. டாமோர்** **காரியா**

நெஞ்சில் கேன்சர் வியாதியால் கஷ்டப்பட்டுவந்த சகோதரி தடிபேன் என்பவருக்காக ஜெபித்தபோது தேவன் சுகத்தைக் கொடுத்தார்.

5வருடங்களாக வியாதியில் கஷ்டப்பட்டுவந்த காந்திபேன் என்ற சகோதரிக்கு ஜெபித்தபோது தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. பத்மிலாள் D. பரியா** **கோடா**

வயிறு வலி மற்றும் காலில் பயங்கர எரிச்சல் ஏற்பட்டு கஷ்டப்பட்டுவந்த சம்காபேன் என்ற சகோதரி இயேசுவை விசுவாசித்து ஜெபித்தபோது பூரண சுகத்தைக் கொடுத்தார்.

புனியாபாய் என்ற சகோதரிக்கு வாந்தி ஏற்பட்டு கஷ்டப்பட்ட நிலையில் ஜெபிக்கவே தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

**சகோ. கக்கிரா R. டாமோர்** **வாகுனி**

வயிற்றுவலியினால் கஷ்டப்பட்டு வந்த துர்காபேன் என்ற சகோதரிக்கு ஜெபித்தபோது தேவன் சுகம் தந்தார்.

---

மேலே கண்ட ஆதிவாசிகளின் சாட்சிகளுக்காக தேவனை மகிமைப்படுத்துவோம். இன்னும் பெரிய அற்புதங்களை ஷாலோம் பணித்தளங்களில் தேவன் செய்ய பாரத்தோடு ஜெபிப்போம். ஒவ்வொரு மாதமும் வெளியாகும் இவர்களின் சாட்சிகளை நாம் மற்றவர்களோடு பகிர்ந்து கொண்டு, இன்னும் அதிகமான பீல் ஆதிவாசி ஜனங்கள் மனம் திரும்பி இவர்களைப் போல சாட்சி பகர ஜெபிப்போம். கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக!

# மிஷனெரி ஊழியப் பகிர்வு – தேவனுக்கே மகிமை!

**14.4.2013** காலை புதுக்கோட்டை, C.S.I பிரசன்ன ஆலயத்தில் நம் **சகோ. டேவிட்** அவர்கள் கலந்துக்கொண்டு தேவ செய்தியளித்ததோடு, நம் ஷாலோம் ஊழியங்களைக் குறித்தும் பகிர்ந்துக் கொண்டார். சபைக் குருவானவர் **Rev. S. எட்வின் ஜெபராஜ்** அவர்களை தேவன் ஆசீர்வதிப்பாராக.

**19.04.2013** சனிக்கிழமை அத்திமரப்பட்டி, C.S.I புனித மத்தியா தேவாலயத்தில் நடைபெற்ற முழு இரவு ஜெபத்தில் பாடல் மற்றும் ஆராதனையை **சகோ. ஆலன் எல்விஸ்** அவர்கள் நடத்த, ஜெப வேளையை **சகோ. ஜெயபிரகாஷ், சகோ.டேவிட்** ஆகியோர் நடத்தினார்கள். தேவ செய்தியினை **சகோ. ரதிஸ்** அவர்கள் வழங்கினார்கள். ஆலயக் குருவானவர் **Rev. பாஸ்கர்** அவர்களையும் சபைப் பொறுப்பாளர் **Bro. செல்வக்குமார்** அவர்களையும் தேவன் ஆசீர்வதிப்பாராக.

**20.04.2013 –**ல் நாசரேத் ஜெயராஜ் அன்ன பாக்கியம் C.S.I பெறியியல் கல்லூரி சிற்றாலயத்தில், கல்லூரியில் அரசுத் தேர்வெழுதும் வாலிபர்களுக்கான சிறப்புக் கூடுகையில் பாடல் வேலையை **சகோ. ரதிஸ்குமார்** மற்றும் **சகோ. ஆலன் எல்விஸ்** நடத்தினர். நம் தலைமை அலுவலக ஊழியர்கள் சேர்ந்து ஒரு குருநாடகத்தை நடத்தினார்கள். **சகோ. அற்புதராஜ் மார்காஷிஸ்** அவர்கள் தேவ செய்தியளிக்க, நம் தலைமை அலுவலக சகோதரிகள் அபிநயப் பாடல்களைப் பாடியது சிறப்பாக இருந்தது. இந்தக் கூடுகை **சகோ. சாம் தியோடர்** (நாசரேத்) அவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

**21.04.13** ஞாயிறு பிள்ளையன்மனை C.S.I பரமேறுதலின் ஆலயத்திலும், நொச்சிக்குளம் C.S.I தேவாலயத்தில் நடந்த ஆராதனையிலும் நடந்த காலை ஆராதனையில் **சகோ. ஆலன் எல்விஸ்** அவர்கள் கலந்து கொண்டு தேவசெய்தியளித்ததுடன் நம் ஷாலோம் ஊழியத்தைக் குறித்தும் விளக்கிக் கூறினார். இதன்பின் வாலிபருக்கான செய்தியை **சகோ. சுந்தர்சிங்** மற்றும் **சகோ. நவராஜ்** அவர்கள் கொடுத்தார்கள். சபை குருவானவர் **Rev.Dr.A. கிங்ஸ்லி N. டேனியல்** அவர்களை தேவன் ஆசீர்வதிப்பாராக.

**4.5.2013** சனிக்கிழமை தூத்துக்குடி VGS ஸ்கூலில் வைத்து, தூத்துக்குடி முழு இரவு ஜெப ஐக்கியத்தின் மூலமாக நடந்த முழு இரவு ஜெபத்தில் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் கலந்துக் கொண்டு தேவ செய்தியளித்து, நம் ஷாலோம் ஊழியங்களைக் குறித்தும் விளக்கமாக எடுத்துரைத்தார்கள். தூத்துக்குடி முழு இரவு ஜெப ஐக்கிய பொறுப்பாளர்களுக்கு ஷாலோம் சார்பாக நன்றி கூறுகிறோம்.

**5.5.2013** ஞாயிறு தூத்துக்குடியிலுள்ள IPM திருச்சபையின் காலை ஆராதனையில் நம் ஷாலோம் திருச்சபையின் **பிஷப். V.தேவதாஸ்** அவர்கள் கலந்து கொண்டு **"உன் சந்ததியின்மேல்"** என்ற தலைப்பில் தேவ செய்தியளித்தார். **பிஷப். ஸ்டீபன்** அவர்களுக்கு ஷாலோம் ஊழியத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**12.5.2013** ஞாயிறு காலை தூத்துக்குடியிலுள்ள சீயோன் திருச்சபையில் நமது **பிஷப். தேவதாஸ்** அவர்கள் கலந்துக் கொண்டு **"யோசுவா"**வைக் குறித்து செய்தியளித்தார்கள். **Pr. விக்டர் ஜெயபால்** அவர்களுக்கு ஷாலோம் சார்பாக நன்றி.

## தூத்துக்குடி ஷாலோம் தலைமை அலுவலக ஊழியர்கள் & கிளை அலுவலக ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்..

### தூத்துக்குடி தலைமை அலுவலகம்

| | | |
|---|---|---|
| **சகோ. J.** அற்புதராஜ் மர்காஷிஸ் (Head Master, Rtd.) | – | தன்னார்வ தொடர்பு துறை பொறுப்பாளர் |
| **சகோ. Y.** பிரேம்குமார் (Chief Manager, IOB Bank, Rtd.) | – | தன்னார்வ நிதிப் பொறுப்பாளர் |
| **சகோ. S.** சாம் குணசீலன் | – | அலுவலக மேலாளர் |
| **சகோ. S.** ஆலன் எல்விஸ் | – | நிதி மற்றும் கணக்காளர் |
| **சகோதரி. D.** எபனேசர் | – | கணக்காளர் |
| **சகோதரி. J.** கீதா | – | கணக்காளர் |
| **சகோதரி. J.** ஆக்கில்லா எஸ்தர் | – | கணக்காளர் (Part TIme) |
| **சகோ. R.** சுந்தர்சிங் | – | கணக்காளர் (Part TIme) |
| **சகோ. J.** ஜாண்சன் ஜெபராஜ் | – | ஊழிய முன்னேற்றப் பணி செயலாளர் |
| **சகோ. J.** ரதிஸ் குமார் | – | ஊழிய முன்னேற்றப் பணி செயலாளர் |
| **சகோ. S.** ஜெயபிரகாஷ் | – | மாத பத்திரிக்கை பொறுப்பாளர் |
| **சகோ. I.A.** ஜெயபால் | – | வங்கி மற்றும் வெளி வேலை பொறுப்பாளர் |
| **சகோதரி. S.** எலிசபெத் | – | நன்றி கடிதம் பொறுப்பாளர் |
| **சகோதரி. G.** லில்லி ஜெயா | – | மிஷனெரி மாத அறிக்கை பொறுப்பாளர் |
| **சகோதரி. G.** புஷ்பரத்தினம் ஜெபா | – | அனுப்புகை பொறுப்பாளர் |
| **சகோதரி. G.** எப்சிபா | – | முகவரி பொறுப்பாளர் |
| **சகோதரி. J.** கோகிலா | – | ஜெப ஊழிய பொறுப்பாளர் |
| **சகோ. R.** டேவிட் | – | கணக்காளர் (Shalom Charity Mission) |
| **சகோதரி. S.** ஜெப ராணி | – | கணக்காளர் (Shalom Charity Mission) |

### சென்னை கிளை அலுவலகம்

| | | |
|---|---|---|
| **சகோ. R.** கார்த்திக்கேயன் | – | முன்னேற்றப் பணி அலுவலக இயக்குநர் |
| **சகோ. R.** ஜேசு ராஜா | – | ஊழிய முன்னேற்றப் பணி செயலாளர் |
| **சகோ. T.** ஸ்டாலின் | – | ஊழிய முன்னேற்றப் பணி செயலாளர் |

### மார்த்தாண்டம் கிளை அலுவலகம்

| | | |
|---|---|---|
| **சகோ. G.** செல்வதுரை | – | ஊழிய முன்னேற்றப் பணி செயலாளர் |

ஷாலோம் ஊழியத்தில் பொறுப்பாயிருக்கின்ற தேவ பிள்ளைகள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்காகவும், அவர்கள் செய்கின்ற ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள். தேவன் அவர்களுக்கு நல்ல சுகத்தையும் பெலனையும், ஞானத்தையும் கொடுத்து ஊழியத்திலே இன்னும் வல்லமையாய் பயன்படுத்த ஜெபியுங்கள்.

# தேவனிடம் வேண்டிக் கொள்ளுங்கள்...



- ❋ நம் தலைமுறையில் முழு பீல்மக்களுக்கும் சுவிஷேசம் அறிவிக்கப்படவும், 2020க்குள் 7000 கிராமங்களில் 7000 சுதேச ஊழியர்கள் எழுப்பப்படவும் ஜெபியுங்கள்.
- ❋ ஷாலோம் திருமண்டல சபைப் பணிகளின் வளர்ச்சிக்காகவும், ஷாலோம் மிஷனெரிப் பணிகளின் திட்டங்களுக்காகவும், ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலம் நடைபெறும் சமுதாய முன்னேற்றப் பணிகளுக்காகவும் ஜெபியுங்கள்.
- ❋ ஷாலோம் ஊழியத்தின் மூலம் தாங்கப்படும் ஹாஸ்டல் பிள்ளைகள், பிஜல்பூர் பள்ளி மாணவர்கள், வீட்டிலிருந்து கல்வி பயின்று வரும் பிள்ளைகள், பராமரிக்கப்படும் பிள்ளைகள் யாவருக்கும் தேவன் நல்ல ஞானத்தையும், பாதுகாவலையும், சுகத்தையும் கொடுத்து வழி நடத்தும்படியாக ஜெபியுங்கள்.
- ❋ தேவ கிருபையினால் தற்போது 3 மாநிலங்களிலுள்ள 30 கிராமங்களில் நடைபெற்று வரும் ஆலயக் கட்டுமானப் பணிகளை தேவன் ஆசீர்வதிக்கவும், அதற்கான தேவைகளை தேவன் சந்தித்து, ஆலயங்கள் பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.
- ❋ இந்த ஜூன் மாதம் புதிய கல்வியாண்டில் அடியெடுத்து வைக்கும் நமது பீல் ஆதிவாசி சிறுவர்களுக்காக ஜெபியுங்கள். அவர்களை தேவன் ஆசீர்வதித்து ஞானத்தினால் நிரப்பவும், மேற்படிப்பிற்காக காத்திருப்போருக்கு தேவன் நல்ல வழி வாசல்களைத் திறக்கவும் ஜெபியுங்கள். மேலும் இந்த பீல் ஆதிவாசி சிறுவர்களின் படிப்பிற்கான இந்த வருடத் தேவைகள் **ரூ. 6 இலட்சங்கள்** சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.
- ❋ இந்த ஜூன் 9ம் தேதி முதல் 12ம் தேதி வரை நமது ஷாலோம் பணித்தளங்களைப் பார்வையிடச் செல்லும் **சகோ. மோகன சுந்தரம்** அவர்களின் பணித்தள பார்வையை தேவன் ஆசீர்வதிக்கவும், பிரயாணங்களில் நல்ல பாதுகாவலை கொடுக்கவும் ஜெபியுங்கள்.
- ❋ குஜராத் பணித்தள அலுவலகத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட ஊழியர்கள் தேவைப்படுகிறார்கள். தேவனுக்கென்று தங்களை அர்ப்பணித்த தேவ பிள்ளைகளை தேவன் கொண்டுவரும்படியாக ஜெபியுங்கள்.
- ❋ பணித்தளங்களில் ஒவ்வொரு வெள்ளியும் நடைபெற்றுவரும் சுகமளிக்கும் ஆராதனைக்காக, அதில் அநேகர் பங்குபெற்று அற்புதங்களைப் பெற்று தேவனண்டையில் சேர ஜெபியுங்கள்.
- ❋ **பேராயர். தேவதாஸ்** மற்றும் அவர்கள் துணைவியார் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களுக்காகவும் பிள்ளைகளுக்காகவும் விஷேசமாக ஜெபியுங்கள். தேவன் தாமே அவர்களுக்கு தமது ஞானத்தையும், கிருபைகளையும் தந்து ஊழியங்களை நடத்திச் செல்லவும், நல்ல சுகத்தையும், பெலத்தையும், பிரயாணங்களில் பாதுகாவலையும் தேவன் தந்து, விசேஷித்த அபிஷேகத்தின் வல்லமையால் நிரப்பவும் ஜெபியுங்கள். தேவன் பேராயர் குடும்பத்தை பீல் மக்களுக்கு மட்டுமன்றி தேசத்திற்கும் ஆசீர்வாதமாக பயன்படுத்த ஜெபியுங்கள்.

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD - PROJECT



மாணவனின் பெயர் : **சிலாஸ் டாமோர்**

தந்தையின் பெயர் : ராமு டாமோர்

தாயார் பெயர் : சவிதா டாமோர்

பிறந்த நாள் : 27.11.2005

படிக்கும் வகுப்பு : LKG

சொந்த ஊர் : கோபால்புரா

மாவட்டம் & மாநிலம் : ஜாபுவா, மத்தியப்பிரதேசம்

### மாணவனின் பெற்றோரைப் பற்றிய சில வரிகள்:-

இவனுடைய தந்தை சகோ. ராமு டாமோர் இயேசுவை அறியாத பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவர். இவருடைய மகள் வியாதி ஏற்பட்டு மிகவும் கஷ்டப்பட்டு வந்தார். அநேக மருத்துவம் மற்றும் மந்திர கிரியைகள் செய்தும் பலனில்லாமல் இறுதியாக ஷாலோம் ஊழியங்களைக் குறித்துக் கேள்விப்பட்டு, சுதேச ஊழியரிடம் சென்று ஜெபித்தபோது தேவன் அற்புத விடுதலை கொடுத்தார். இந்த அற்புத சுகத்தைப் பெற்றுக் கொண்டதால் இவரது குடும்பத்தில் அனைவரும் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டனர். தொடர்ந்து ஜெபித்து ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்த போது தேவன் ஊழியத்திற்கு அழைத்தார். இப்போது தனது சொந்த கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார்.

**மாணவனைக் குறித்து :-** சீலாஸ் நன்றாக படிப்பான். படித்தபின் ஊழியம் செய்ய வாஞ்சையாக உள்ளான்.

**மாணவனைத் தாங்குபவர் :-** ***Ms. Saranya - Thoothukudi***

**ஜெபித்துத் தாங்க முன்வாருங்கள்...**

பிரியமானவர்களே ! நீங்களும் ஜெபித்து மாதம் ரூ. 600/- கொடுத்து பீல் ஆதிவாசி மாணவரைத் தாங்க முன் வரலாம். நாம் பராமரித்து வரும் 947 மாணவர்களில் இன்னும் **163 மாணவர்களுக்கு ஆதரவாளர்கள் தேவைப்படுகிறார்கள்.**

***Shalom Charity Mission*** என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை D.D. அல்லது Cheque மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம். உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக அறிமுகப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம்.

## கிறிஸ்துவின் சாட்சிகளாகவும், திருச்சபைக்குத் தூண்களாகவும் தேசத்திற்கு ஆசீர்வாதமாகவும் உருவாகி வரும் நமது பீல் ஆதிவாசி மாணவர்களின் மேற்படிப்பிற்காக கரம் கொடுப்போம் வாருங்கள்!



ID : GJ-0064
பெயர் : ப்ரீத்திகா N. பில்வால்
த/பெ. : நவல்சிங் பில்வால்
ஊர் : தெல்சர், குஜராத்
படிப்பு : +2 Completed
தேவை : ஆண்டிற்கு ரூ. 20,000/– வீதம் 3 வருடத்திறகு.



ID : GJ-0081
பெயர் : சுனிதா S. மேடா
த/பெ. : சாம்ஜி மேடா
ஊர் : ஜெரிகோட், குஜராத்
படிப்பு : B.A., Ist Yr.
தேவை : ஆண்டிற்கு ரூ. 20,000/– வீதம் 3 வருடத்திறகு.



ID : GJ-0039
பெயர் : காபிரியேல்K. பாபோர்
த/பெ. : கன்னு பாபோர்
ஊர் : தாவ்டியா, குஜராத்
படிப்பு : Nursing Ist Yr.
தேவை : ஆண்டிற்கு ரூ. 30,000/– வீதம் 3 வருடத்திறகு.



ID : GJ-0020
பெயர் : ஹட்சன் C. டாமோர்
த/பெ. : சந்து டாமோர்
ஊர் : ஹட்மத்கூட், குஜராத்
படிப்பு : Fire Brig - I yr.
தேவை : ஆண்டிற்கு ரூ. 20,000/– வீதம் 3 வருடத்திறகு.



ID : GJ-0054
பெயர் : இம்மானுவேல் கனவா
த/பெ. : மசூர் கனவா
ஊர் : கொலானா, குஜராத்
படிப்பு : B.A., I yr.
தேவை : ஆண்டிற்கு ரூ. 20,000/– வீதம் 3 வருடத்திறகு.



ID : GJ-0032
பெயர் : மகேஷ் G. டாமோர்
த/பெ. : கோர்சிங் டாமோர்
ஊர் : புரக்குவா, குஜராத்
படிப்பு : B.A., I yr.
தேவை : ஆண்டிற்கு ரூ. 20,000/– வீதம் 3 வருடத்திறகு.



ID : GJ-0049
பெயர் : அஞ்சு M. புரியா
த/பெ. : மங்கு புரியா
ஊர் : பாட்டன்புரா, குஜராத்
படிப்பு : +2 Completed
தேவை : ஆண்டிற்கு ரூ. 20,000/– வீதம் 3 வருடத்திறகு.



ID : GJ-0105
பெயர் : முக்தி W. சங்காடா
த/பெ. : வில்சன் சங்காடா
ஊர் : சாப்ரி, குஜராத்
படிப்பு : B.A., I yr.
தேவை : ஆண்டிற்கு ரூ. 20,000/– வீதம் 3 வருடத்திறகு.



ID : MP-0138
பெயர் : சுந்தர் D. ஹத்திஜா
த/பெ. : தபு கத்திஜா
ஊர் : ருன்கேடா, ம.பி.
படிப்பு : College I yr.
தேவை : ஆண்டிற்கு ரூ. 20,000/– வீதம் 3 வருடத்திறகு.



ID : MP-0093
பெயர் : ராஜேஷ் S. புரியா
த/பெ. : சோம்லா புரியா
ஊர் : ரூபாகேடா, ம.பி.
படிப்பு : 11th
தேவை : ஆண்டிற்கு ரூ. 10,000/– வீதம் 1 வருடத்திற்கு.





ID : MP-0061
பெயர் : டேவிட் P. புரியா
த/பெ. : பூர்சன் புரியா
ஊர் : அந்தர்வேலியா, ம.பி.
படிப்பு : 10th
தேவை : ஆண்டிற்கு ரூ. 10,000/– வீதம் 1 வருடத்திற்கு.



ID : MP-0091
பெயர் : ஷீலா S. டாமோர்
த/பெ. : சர்தார் டாமோர்
ஊர் : காளகேத், ம.பி
படிப்பு : 10th
தேவை : ஆண்டிற்கு ரூ. 10,000/– வீதம் 1 வருடத்திற்கு.



ID : MP-0059
பெயர் : லீலா P. முனியா
த/பெ. : பால் முனியா
ஊர் : முண்டத், ம.பி
படிப்பு : 10th
தேவை : ஆண்டிற்கு ரூ. 10,000/– வீதம் 1 வருடத்திற்கு.



ID : RJ-0356
பெயர் : சமிலா K. மச்சார்
த/பெ. : கிடியா மச்சார்
ஊர் : டான்டி சோட்டி, இரா.
படிப்பு : B.A., II yr.
தேவை : ஆண்டிற்கு ரூ. 20,000/– வீதம் 2 வருடத்திற்கு.



ID : RJ-0332
பெயர் : சுரேஷ் K. தாமா
த/பெ. : களியா தாமா
ஊர் : வல்ரா, இராஜ்.
படிப்பு : +2 Completed
தேவை : ஆண்டிற்கு ரூ. 20,000/– வீதம் 3 வருடத்திற்கு.



ID : RJ-0271
பெயர் : தாவுத் B. டோடியார்
த/பெ. : பாதர் டோடியார்
ஊர் : பேடவ், இராஜ்
படிப்பு : +2 Completed
தேவை : ஆண்டிற்கு ரூ. 20,000/– வீதம் 3 வருடத்திற்கு.



ID : RJ-0291
பெயர் : மம்தா D. டின்டோர்
த/பெ. : தால்சிங் டின்டோர
ஊர் : ஜகோடியா, இராஜ்
படிப்பு : +2 Completed
தேவை : ஆண்டிற்கு ரூ. 20,000/– வீதம் 3 வருடத்திற்கு.



ID : RJ-0337
பெயர் : சாந்தி K. டோடியார்
த/பெ. : கல்லா டோடியார்
ஊர் : போர்பாடோட், இராஜ்
படிப்பு : +2 Completed
தேவை : ஆண்டிற்கு ரூ. 20,000/– வீதம் 3 வருடத்திற்கு.



ID : RJ-0266
பெயர் : சுக்லால் B. ஹடா
த/பெ. : பகுல்சந்திர ஹடா
ஊர் : பிச்வாடா, இராஜ்.
படிப்பு : +2 Completed
தேவை : ஆண்டிற்கு ரூ. 20,000/– வீதம் 3 வருடத்திற்கு.



ID : RJ-0259
பெயர் : குளோரி A. கராசியா
த/பெ. : அனில் கராசியா
ஊர் : ஜும்கி, இராஜ்.
படிப்பு : 11th.
தேவை : ஆண்டிற்கு ரூ. 10,000/– வீதம் 1 வருடத்திறகு.

## வாருங்கள்! பீல் ஆதிவாசி மாணவர்களைக் கல்விப்பணியில் தாங்குவோம்! கிறிஸ்துவுக்காக புதிய சமுதாயத்தை உருவாக்குவோம்!



தேவ கிருபையால் அவர் தந்த தரிசனப்படி பீல் மக்கள் மத்தியில் 3மாநிலங்களிலும் சுமார் 20,000 குடும்பங்களுக்கு மேலாக இயேசுவை ஏற்றுக்கொண்டு புதுவாழ்வு பெற்ற இவர்கள் சந்ததியைக் குறித்து மிகவும் பாரமுண்டு.

பீல் ஆதிவாசி மக்களுக்கு சில கிராமங்களில் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் கூட வெகு தொலைவில் தான் உண்டு. 5ம் வகுப்பிற்கு மேல் படிப்பதற்கு இன்னும் பல கி.மீ தூரம் நடந்து சென்றாலும் தரமான கல்வி கற்றுக் கொடுக்க பள்ளிகள், ஆசிரியர்கள் கூட கிடையாது. மேலும் +1 மற்றும் +2 படிப்பதற்கு ஒரு தாலுகாவிற்கு சில பள்ளிகள் மட்டுமே உண்டு. போக்குவரத்து வசதியும் வீட்டில் படிப்பதற்கு சூழ்நிலையும், போதிய பண வசதியும் இல்லாமல் உயர் கல்விக்கு போவது மிக கடினம். கல்லூரி மற்றும் பிற வேலை வாய்ப்பிற்காக படிப்பதை எண்ணிக் கூட பார்க்க முடியாது. அப்படியே படித்தாலும் பணத் தேவையில் மாதம் 10% வட்டி கட்டும்படியாக கடன் வாங்கி வேதனைப்படுவார்கள்.

தேவ கிருபையால் நாம் ஷாலோம் ஊழியத்தின் மூலம் சுமார் 1700 பிள்ளைகளைப் படிக்க வைத்து வருகிறோம். மாதம் ரூ.500/– என உதவி செய்து தாங்கி வருகிறது. இந்த உதவியை 8ம் வகுப்பு வரை சமாளித்து விடலாம். ஆனால் 10,11,12 மற்றும் கல்லூரிப் படிப்பிற்காக, வீட்டைவிட்டு நகரத்துக்கு வந்து, தனி அறை எடுத்து, சமைத்து உண்டு படிக்க முடிவதில்லை. மேலும், மாணவர்களுக்கு விடுதி வசதிகள் குறைவு. மேலும் நம் ஷாலோம் மாணவர்கள் டியூசன் படித்து நல்ல மதிப்பெண்கள் பெற வாஞ்சிக்கிறார்கள். நல்ல மதிப்பெண்கள் பெற்றவர்கள் Nurse.Teacher,Computer Group, ITI இப்படிப்பட்ட படிப்பிற்கு செல்கிறார்கள். மேலும் சில சுதேச ஊழியரின் பிள்ளைகளில் மிக ஞானமுள்ளவர்கள் ஆங்கிலப் பள்ளிகளில் சேர்ந்து நன்கு படிக்கிறார்கள். இவர்களுக்கு 3 அல்லது 4 வருடங்களுக்கு கூடுதலான செலவுகளாக ரூ. 10,000/–, ரூ. 20,000/–, ரூ. 30,000/– என அவர்கள் படிப்பிற்கு ஏற்றபடி நிதி உதவியை நாம் செய்ய வேண்டும்.

மேற்கண்ட மாணவர்கள் சுமார் 200 பேர்களுக்கு நாம் நிதிஉதவி செய்ய வேண்டும். இவர்கள் படித்து முடித்து நல்ல வேலைக்கு வந்த பின்பு குடும்பத்திற்கும், சபைக்கும், தேசத்திற்கும் ஆசீர்வாதமாக அமைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. உங்கள் குடும்பம் மற்றும் சபையின் சார்பில் ஒரு ஆதிவாசி மாணவனை ஜெபித்து தாங்கி ஆசீர்வதிக்க அன்புடன் அழைக்கிறோம். தேவன் உங்களையும் உங்கள் சந்ததியையும் ஆசீர்வதிப்பாராக!

# தூய மேரி மேல்நிலைப் பள்ளி,
## சாயர்புரம்


தமிழ் நாட்டு திருநெல்வேலி மாவட்டத்தில் 1810ம் ஆண்டு பெய்த மழையால் பெரும் வெள்ளச் சேதம் ஏற்பட்டது. 1811ம் ஆண்டு பெய்த பெரும் மழையால் திருநெல்வேலி மாவட்டம் முழுவதும் வெள்ளக் காடாயிற்று. அதைத் தொடர்ந்து பயங்கர கொள்ளை நோய் பல கிராமங்களில் பரவியதால் ஆயிரக்கணக்கானோர் நோயினால் அவதிப்பட்டனர். அப்பொழுது இந்துக்கள் ஒன்றுசேர்ந்து இது கிறிஸ்தவர்களாக மாறியதால் ஆனது என்று கோபமுற்று பல்வேறு வழிகளில் கிறிஸ்தவர்களை துன்பிறுத்தி சபைகளை அழித்தனர். இதனால் பாளையங்கோட்டையில் இருந்து **சாமுவேல் சாயர்** என்ற பெரும் பணக்காரர் செபத்தையாபுரத்திற்கு மேற்கே 150 ஏக்கர் நிலத்தை தன் சொந்தமாக வாங்கி துன்புறுத்தப்படும் கிறிஸ்தவர்கள் குடியேறும்படி உதவினார். அங்கு குடியேறிய மக்கள் அந்த இடத்திற்கு சாமுவேல் சாயர் அவர்களின் நினைவாக சாயர்புரம் என்று பெயரிட்டு கடவுளின் பாதுகாப்பில் சிறப்பாக வாழ்ந்தார்கள்.

1842ல் அருள்திரு **ஜி.யு. போப் ஜயரவர்களை** குடும்பமாக அப்பகுதிக்கு அனுப்பினர். போப் ஐயரவர்களின் மனைவி **மேரி ஜேன்** அவர்கள் பெண்கள் பள்ளியை 1843 ஆம் ஆண்டு ஆரம்பித்து நடத்தினார்கள். **மேரி ஜேன் அம்மையார்** திடீரென்று மரித்துவிட்டார். அதனால் 1851ல் பெண்கள் பள்ளி மூடப்பட்டது. 1852ல் சாயர்புரம் மிஷனெரியாக **H.C.ஹக்ஸ் டபுள் ஐயர்** குடும்பமாக பொறுப்பேற்றார். அவர் மூடப்பட்ட பெண்கள் பள்ளியை மீண்டும் திறந்தார். 1878ம் ஆண்டு ஆரம்பப்பள்ளி மகளிர்பள்ளி என்று தனியாக இயங்கியது.

1905ம் ஆண்டு பெண்கள் பள்ளிக்கு **அருள்திரு A.J. காடன் ஐயர்** அவர்கள் அரசு அங்கிகாரம் பெற்றுத்தந்தார். 1907ல் மகளிர் இடைநிலைபள்ளியாக உயர்த்தப்பட்டது. பெண்கள் பள்ளிக்கு புனித மேரி மகளிர் இடைநிலைப் பள்ளி என்று போப் ஐயரின் மனைவி மேரி ஜேன் நினைவாக கார்டன் ஐயரவர்கள் பெயர் சூட்டினார். அதற்குபின் நாசரேத்திலுள்ள புனித யோவான் மகளிர் உயர்நிலைப்பள்ளியில் பணிசெய்த பெண் மிஷனெரிகளான **இவான்ஸ், ஸவிங்களர்** என்ற இருவரும் புனித மேரி மகளிர் பள்ளியை முன்னேற்ற பல திட்டங்கள் வகுத்தனர். குறிப்பாக **இவான்ஸ் அம்மையார்** 1926–1951 வரை மேலாளராகவும், தாளாளராகவும் இருந்து சிறந்த பணியாற்றினார்கள். 1931ம் ஆண்டு பிரதானக் கட்டடம் கட்டப்பட்டு முடிக்கப்பட்டது. 1945ம் ஆண்டு நடுநிலைப்பள்ளி உயர்நிலைப்பள்ளியாக அரசு அங்கிகாரம் பெற்றது. 1978ம் ஆண்டு மேல்நிலைப் பள்ளியாக உயர்வு பெற்றது.

ஒருசில மாணவிகளோடு 1843ஆம் ஆண்டில் **திருமதி. மேரி ஜேன் போப்** அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட பள்ளி இப்போது 1050 மாணவிகளோடு அரச ஊதியம் பெறும் ஆசிரியர்கள் 27, அலுவலகப்பணியாளர்கள் 6 மற்றும் பள்ளி நிர்வாகத்தின் மூலம் ஊதியம் பெறும் பல ஆசிரியர்கள், பணியாளர்களும் பணி செய்து வருகின்றனர். 2011, 2012 ஆகிய இரண்டு ஆண்டிலும் 10ம் வகுப்பில் 100 சதவீதமும், 12ம் வகுப்பில் 99.5 சதவீதமும் அரசுத்தோர்வில் வெற்றிப்பெற்று பள்ளிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

சாயர்புரம் வட்டாரத்திலே இப்படிப்பட்ட ஒரு பெண்கள் பள்ளி சிறந்து விளங்குவது தேவனுக்கே மகிமையைக் கொண்டுவரும் ஒன்றாக உள்ளது. இப்பள்ளியின்மேல் நல்லெண்ணம் கொண்ட அன்பு உள்ளங்கள், பழைய மாணவிகளின் சங்கம், பணிசெய்த தலைமை ஆசிரியைகள், அனைத்து ஆசிரியைகள், மாணவிகளின் கூட்டு முயற்சியால் **அருள்திரு. கார்டன் ஐயரவர்கள்** நினைவு கட்டிடம், **கமலா ஞானசிரோமணி ஹால், அழகிய சிற்றாலயம், பழைய மாணவியர் ஜுபிலி ஹால், இவான்ஸ் கலையரங்கம்** ஆகியவை கட்டப்பட்டு அழகுடனும், நல்ல பொலிவுடனும் காட்சி அளிக்கின்றன. மென்மேலும் சிறப்புபெற்று இறைவன் அருள்பெற இனிதே வாழ்த்துகிறோம்.





# ஷாலோம் மிஷனெரி ஜெபக்கூடுகை

| நாள் | நேரம் |
|---|---|
| **08.06.2013,** | **மாலை 5.00 மணி முதல்** |
| **சனிக்கிழமை** | **7.00 மணி வரை** |

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**

M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்)
வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

*யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.*

தொடர்புக்கு: **சகோ. G. செல்வதுரை,** Cell : 94876-89869,
**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405 **சகோ. கிங்பெர்ட்,** Cell : 94868-64820

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த 21 ஆண்டுகளாக தேவன் தந்த Sharing Love Mission (அன்பு பகிர்வு இயக்கம்) மூலமாக 1 கோடி பீல் ஆதிவாசி மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், சீஷர்களாக்கவும், ஊழியர்களை எழுப்பவும், சபைகளைக் கட்டவும் தேவன் கிருபை தந்து, ஆயிரம் ஆயிரமாக ஆசீர்வதித்து வருகிறார்.

அதே வேளையில் நம் விசுவாசக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிக்காக பள்ளிக்கூடங்கள், விடுதிகள் கட்டப்படவும் மற்றும் சுகாதார மருத்துவத் திட்டங்களும், பயிற்சி முகாம்களும் நடத்தப்படவும் வேண்டும். மேலும் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும்.

நமக்கு வரும் நிதி உதவியில் மூன்றில் ஒரு பங்கு மேற்கண்ட திட்டங்களுக்காகவே செலவிடப்படுகின்றது. இன்னும் வரும் காலங்களில் மிக அதிக அளவில் இவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். குறிப்பாக சுமார் **10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு "கல்வி அறிவு வளர்ச்சி"** திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

இதற்காக **Shalom Charity Mission** – என்ற இயக்கம் பதிவு செய்யப்பட்டு சமுதாய முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. **Sharing Love Mission** சுவிசேஷப் பணி மற்றும் சபை காரியங்களை மட்டும் கவனித்து செயல்படும்.

**Shalom Charity Mission** – மற்ற சமுதாய முன்னேற்ற பணிகளையும், குழந்தைகளின் கல்விப் பணிகளையும் கருத்தாகத் திட்டமிட்டு, நிதிகளை சேகரித்து திறம்பட செயல்படும். Hostel பணி, Education பணி, Literature Fund மற்றும் இதர சமூக சேவை பணிகளுக்கு நிதி உதவி செய்யும்போது **Shalom Charity Mission** – என்ற பெயருக்கு அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

***மேலும் குழந்தை ஆதரவுத் தொகை*** அனுப்புவோர் **Shalom Charity Mission** – என்ற பெயருக்கே **D.D. or Cheque or M.O.** மூலமாகவோ அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

| | | |
|---|---|---|
| வங்கி கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கி கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch**<br>(IFS Code : UTIB0000105) |
| **TMB** வங்கி கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch**<br>(I F S Code : TMBL0000174) |

# ஷாலோம் சேரிட்டி மிஷன்

## பீல் ஆதிவாசி மாணவர் கல்வி மேம்பாட்டுத் திட்டம்

### ஜெபித்துத் தாங்கப்படும் மாணவர்களின் கண்ணோட்டம்

| தாங்கப்படும் மாணவர்கள் | | | ஆண் | பெண் |
|---|---|---|---|---|
| **குஜராத் :–** | | | | |
| SCM Hostel | - | Dahod | 8 | 5 |
| IPM Mission | - | Jhalod | 10 | 11 |
| SCM Home | - | Gujarat | 106 | 53 |
| **மத்தியப்பிரதேசம் :–** | | | | |
| SCM Hostel | - | Gadwada (MP) | 37 | 8 |
| SCM Hostel | - | Harinagar (MP) | 26 | 9 |
| SCM Home | - | Madhya Pradesh | 89 | 68 |
| **இராஜஸ்தான் :–** | | | | |
| SCM Hostel | - | Bijalpur (Raj) | 107 | 75 |
| SCM Hostel | - | Goika (Raj) | 32 | |
| SCM Home | - | Rajasthan | 198 | 105 |
| **மொத்தம்** | | | **613** | **334** |

ஆக மொத்தம் **947 பீல் ஆதிவாசி** சிறு பிள்ளைகளை நாம் தாங்கி வருகிறோம். பிள்ளைகள் நன்றாக படித்து முன்னேறி வருகிறார்கள்.

| | |
|---|---|
| ஆதரவாளர்களால் தாங்கப்படும் மாணவர்கள் | 784 |
| ஆதரவாளர்கள் தேவைப்படும் மாணவர்கள் | 163 |


### நமது பீல் ஆதிவாசி மாணவர்களில் உயர்கல்வி பயில்வோர் விபரம்

| கல்லூரி | 12 th | 11 th | 10 th | மொத்தம் |
|---|---|---|---|---|
| 49 | 38 | 41 | 78 | 206 |

## ஷாலோம் பிரதிநிதிகள் தேவை....

கர்த்தருடைய பெரிதான கிருபையால் ஷாலோம் பணித்தளங்களில் ஊழியங்கள் வளர்ந்து பெருகி வருவதால், அதற்கான தேவைகளும் அதிகரித்து வருகின்றன. இதற்காக தன்னார்வமாய் செயல்பட்டு காணிக்கைகளை சேகரித்து அனுப்பும், **ஷாலோம் பிரதிநிதிகள் 300** பேர் தேவை. கர்த்தரால் ஏவப்படுவோர் எங்களைத் தொடர்பு கொள்ளுமாறு அன்பாய்க் கேட்கிறோம். தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

## நினைவுப்படுத்துகிறோம்......



அன்பான உண்டியல் ஆதரவாளர்களே!

இந்த கடிதம் மூலம் உங்களோடு தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளும் நன்றாக படித்து முன்னேறி வருகிறார்கள். எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் உள்ள காணிக்கையை இந்த கல்வியாண்டு பீல் ஆதிவாசி பிள்ளைகளின் படிப்பிற்காக உற்சாகத்தோடு கொடுத்து அவர்களின் தேவைகளை சந்திப்பீர்கள் என்று நம்புகிறோம். பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம்.

நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாகவோ அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O., D.D., or Cheque** மூலமாக **Sharing Love Mission** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறோம். அதைத் திறக்க சாவி **(Key)** வேண்டுமானால் **9345675468 –** இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.

## ஷாலோம் 24 மணி நேர சங்கிலித் தொடர் ஜெபம்

| நாள் | நேரம் |
|---|---|
| **15.06.2013 (சனிக்கிழமை)** | **அதிகாலை 12.00 மணி முதல் மறுநாள் நள்ளிரவு 11.59 மணி வரை (24 மணிநேரம்)** |

நீங்களும் பீல் மக்களுக்காகவும், ஷாலோம் ஊழியத்திற்காகவும் ஏதாவது 1 மணிநேரம் ஜெபிக்க விரும்பினால் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு ஜெபக்குறிப்புகளை அனுப்புகிறோம்.

## மிஷனெரி ஊழியப் பகிர்வு – தேவனுக்கே மகிமை!

12.5.2013 ஞாயிறு காலையில் மதுரை பரவை, CSI தூய இம்மானுவேல் ஆலயத்தில் **சகோ. சாம் குணசீலன்** கலந்து கொண்டு தேவ செய்தியளித்ததோடு, ஷாலோம் ஊழியங்களைக் குறித்தும் கூறினார்கள். ஆலய குரு **Rev. ஜஸ்டின் சகாயராஜ்** அவர்களுக்கு ஷாலோம் சார்பாக நன்றி!

14.5.2013 வியாழக்கிழமை நம் **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் தூத்துக்குடியில் இயங்கிவரும் நிலா ஸீ புட்ஸ் கம்பெனியில், தங்கி வேலை செய்யும் பெண்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தக் கூடுகையில் **"யாக்கோபு போராடிப் பெற்ற ஆசீர்வாதம்"** குறித்து தேவ செய்தியளித்தார்கள். இந்த கூடுகையை ஒழுங்கு செய்திருந்த **திரு. சந்திரன்** மற்றும் **திருமதி. நிலாவதி** அவர்கள் குடும்பத்திற்கு ஷாலோம் சார்பாக நன்றி!



# ஷாலோம் - வேத வினாப் போட்டி 3

**பதில் எழுதுக :**

1. மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக் கொண்டவர்கள் எந்த பட்டணத்தார்?
2. நீ வாழ்வடையும் போது என்னை நினைத்துக் கொள் என்று யார் யாரிடம் சொன்னது?
3. நாம் நிர்மூலமாகாதிருப்பது எதினால்?
4. மனுஷன் செத்தபின் பிழைப்பானோ என்றவன் யார்?
5. யாருக்கு நித்திரை இன்பமாயிருக்கும்?
6. யோபுவின் சுவாசம் யாருக்கு வேறுபட்டிருந்தது?
7. பவுல் குறிப்பிட்ட பிசாசின் மகன் பெயர் என்ன?
8. நீ என்னை விட்டுப் பிரிந்து போகலாம் என்று யார் யாரிடம் கூறியது?
9. ரூபனின் பிரிவினைகளால் உண்டான எவை மிகுதி?
10. கர்த்தருடைய வழி யாருக்கு அரண்? யாருக்கு கலக்கம்?

**நிபந்தனைகள் :**

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. பதில்களை மட்டும் எழுதினால் போதும்.
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : **15.06.2013**

**குறிப்பு :**

வேதவினா போட்டியில் பங்குபெறுவோர் கண்டிப்பாக அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலரின் சந்தாதாரராக இருக்க வேண்டும்.

**கடந்த மாத போட்டிக்கான சரியான விடைகள் :**

1. கீசோன் நதி (நியா. 5 : 21)
2. யோசேப்பு (ஆதி. 27 :7 )
3. நொருங்குண்ட ஆவி (சங். 51 : 17)
4. இருதயத்தில் ஞானமுள்ளவன் (நீதி. 16:21)
5. ராகேல் (ஆதி. 29:17)
6. அனனியா (அப். 22:12)
7. கெரிசீம் (உபா. 11:29)
8. பரிசுத்த சகோதரர்கள் (எபி. 3:1)
9. கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் (வெளி. 14:13)
10. மனோ துக்கத்தினாலே (நீதி. 15:13)

**கடந்த மாத வேத வினாப் போட்டி 2–ல் சரியான விடையினை சரியான நேரத்திற்குள் எழுதி அனுப்பிய 10 பேர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்.**

**1. சகோதரி. ஹெப்சிபா சுந்தர்சிங், தூ–டி. 2. சகோதரி. அஸ்வினி மோசஸ் பிரகாஷ், தூ–டி.**

**3. சகோ. லினஸ் சாமுவேல், தூ–டி**

**பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி**

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168, Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.
Phone: 0461 - 2375468, Cell : 9345675468

சுதேச ஊழியரின் சாட்சி

# போதகர். கிடியா மச்சார்



## டான்டி சோட்டி, இராஜஸ்தான்

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! எனது பெயர் கிடியா மச்சார். நான் இராஜஸ்தான் மாநிலம், பான்ஸ்வாடா மாவட்டத்தைச் சேர்ந்த டான்டிசோட்டி என்ற கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி. நான் இயேசு கிறிஸ்துவை அறியாத ஒரு குடும்பத்தில் பிறந்தவன். அதிகமாக சாராயம் குடித்துவிட்டு சண்டைபோடுவதோடு மற்றவர்களை அடித்து துன்பப்படுத்தும் ஒரு பொல்லாதவனாக வாழ்ந்து வந்தேன். எல்லாவிதமான பாவங்களுக்கும் அடிமைப்பட்டு வாழ்ந்து வந்தேன். மேலும் மந்திரக் கிரியைகளை செய்து மக்களை ஏமாற்றி பணம் சம்பாதித்தேன்.

ஆனால் உள்ளத்தில் சமாதானம் இல்லாமல் மிகவும் வேதனைப்பட்டேன். இந்த நேரத்தில் 1993ம் ஆண்டு சகோ. பாதர் பாரியா என்ற ஷாலோம் ஊழியர் எங்கள் வீட்டிற்கு வந்து இயேசு கிறிஸ்துவைக் குறித்து கூறி, இந்த உலகத்தில் சமாதானமாக இருக்க வேண்டும் என்றால் ஒரே ஒரு வழி, அது நீ இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறினார்.

இயேசு கிறிஸ்துவை முழுமையாக ஏற்றுக் கொண்டு, ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ந்தேன். தேவன் என்னைப் பரிசுத்த ஆவியினால் அபிஷேகித்து, ஊழியத்திறகு அழைத்தார். பின்பு ஷாலோம் ஊழியத்துடன் இணைந்து எங்கள் கிராமத்தை மையமாகக் கொண்டு ஊழியம் செய்து வருகிறேன்.

மேலும் தேவனுடைய பெரிதான கிருபையினால் B.Th., இறையியல் கல்வி கற்று, 20.11.2009 அன்று ஷாலோம் போதகராக தேவக் கிருபையால் பிரதிஷ்டை செய்யப்பட்டு, ஊழியம் செய்து வருகிறேன். தற்போது எங்கள் சபையில் 50க்கும் அதிகமான விசுவாச குடும்பத்தார் தேவனை ஆராதனை செய்து வருகின்றனர். இரண்டு கிளை சபைகளை உருவாக்க தேவன் கிருபை செய்துள்ளார். மேலும் 10 ஊழியர்களை எழுப்பி 10 திருச்சபைகளைக் கட்டுவது எனது தரிசனமாகும். எனக்காகவும், எனது குடும்பத்திற்காகவும் நான் செய்து வரும் ஊழியங்களுக்காகவும் தொடர்ந்து ஜெபியுங்கள்!

இந்த சுதேச ஊழியரை ஜெபித்துத் தாங்குவோர் : **N.L.A.G. Church, Chennai.**

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் இதுவரையில் 500க்கும் அதிகமான பீல் ஆதிவாசி சுதேச ஊழியர்களை எழுப்பி, பயிற்றுவித்து 600க்கும் அதிகமான ஸ்தல சபைகளை ஊருவாக்கியுள்ளோம். இவ்வருடத்தில் 200 புதிய சுதேச ஊழியர்களை எழுப்ப தேவன் கிருபை தருகிறார். குடும்பமாக, சபையாக, குழுவாக மாதம் ரூ. 2000/– ஜெபித்து கொடுத்துத் தாங்க முன் வாருங்கள். பாரத தேசம் எங்கும் வீட்டிற்கு ஒரு நற்செய்தி பணியாளரை அனுப்புவோம். தேசம் தேவனை அறியட்டும்! அல்லேலூயா!

# தூத்துக்குடி கடற்கரை ஜெப ஐக்கியத்தினரின் பணித்தள வருகை
# கரம்பா மற்றும் மான்லி கிராம ஆலயப் பிரதிஷ்டை


மேளதாளங்களுடன் உற்சாக வரவேற்பு


கரம்பா, குஜராத் கிராம ஆலயத்தில் விசுவாசிகளுடன்


கரம்பா கிராம ஆலய பிரதிஷ்டைக்கான ஜெப வேளை


கரம்பா கிராம ஆலயத்தில் கலாச்சார வரவேற்பு


கரம்பா கிராம ஆலயத்தில் கூடியிருந்த விசுவாசிகள்


வில் அம்புகளுடன் நமது சகோதரர்கள்


நமது பணித்தள அலுவலகத்திற்கு முன்பு


பணித்தளத்தில் விசுவாசிகளுக்கு வழங்கப்பட்ட 100 வேதாகமங்கள்


மான்லி (ம.பி.) கிராம ஆலய விசுவாசிகளுடன்

# çjÕdÏ¥ LPtLûW ù_T _d¡V ÏÝ®]¬u
# T¦jR[ YÚûLÙm Uôu- & LWmUô ¡WôU BXV ©W§xûPÙm

தேவ கிருபையினால் அநேக மாதங்கள் தேவ பாதையில் காத்திருந்து ஜெபித்து பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படியாக எங்கள் கடற்கரை ஐக்கியம் மூலமாக பீல் மக்கள் மத்தியில் நடைபெறும் ஷாலோம் ஊழியத்திற்குக் கட்டிக் கொடுக்கபட்ட ஆலயத்தை பிரதிஷ்டை செய்யும்படியாக **சகோ. S. செல்வராஜ், சகோ. S. பொன்ராஜ், சகோ. J. ஜோகின், சகோ. A. விஜயசிங்** ஆகிய நான்கு நபர்கள் புறப்பட்டு சென்றோம். 26 ம் தேதி மாலையில் தாகோத் ஷாலோம் பணித்தளம் அடைந்தோம். ஜெப ஆலயத்திற்கு நமது ஷாலோம் பணித்தள அலுவலகம், ஷாலோம் பயிற்சிக்கூடம், திருமண்டமல நெட்ஒர்க் அலுவலகம், இலக்கிய பணி, மற்றும் அனைத்து அலுவலக ஊழிய பிரிவுகளை இயக்குகிற காரியங்களையும், தொடர்பான ஊழியர்களையும் சந்தித்து ஜெபித்தோம்.

120 வருடங்களுக்கு முன்பு IP –ன் மூலமாக வந்த மிஷனெரிகள், சபைகள், மருத்துவமனையின் வரலாறுகளைக் கேட்டோம். குறிப்பாக IP மின் மருத்துவமனை 10 வருடங்களுக்கு மேலாக செயலற்று அனைத்து கட்டடங்களும் வெறுமையாக இருக்கும் வேளையில் ஷாலோம் ஊழியத்தின் அனைத்து கூட்டங்களும், பயிற்சிகளும் நடைபெற்று வருகிறது. குறிப்பாக அனைத்து வார்டு அறைகளை ஷாலோம் ஊழியங்களுக்கு பயன்படுத்தி வருவதை எண்ணி தேவனை துதித்தோம். அதற்காக ரூ.25,000 வாடகை கட்டி வருவதையும் அறிந்தோம். மேலும் ஊழியப்பாதையில் 22 வருடங்கள் தேவன் நடத்திய விதத்தை கூறும் போது புற ஜாதி மக்கள் மத்தியில் மெய்யாக ஊழிய அழைப்பும் தரிசனமும் பெற்றவர்கள் இந்த அன்பான மிஷனெரி குடும்பத்தினர் என்று தேவனை துதித்தார்கள்.

27ம் தேதி காலையில் சகோ. ஜெயராஜ் அவர்கள் தலைமையில் தாகோத்தில் தெல்சர் கிராம ஆலயத்தை பார்வையிட்டு பின்பு மத்தியப்பிரதேசத்தில் ரூபாகேடா, நவமாடா, காலாகேத் ஆகிய ஆலயங்களை பார்வையிடவும், போதகர்கள் மூப்பர்களை சந்திக்க தேவன் கிருபை தந்தார். சுமார் 30 கிலோ மீட்டர் தூரங்களில் பிரயாணப்படும் வேளையில் திருடர்கள், சாராயம் காப்ச்சிபவர்கள், மந்திரவாதிகள் நிறைந்த பகுதிகளில் இப்படியாக சகோ. தேவதாஸ் குடும்பத்தார் சந்தித்து விசுவாசிகளை, மூப்பர்களை ஊழியர்களை உருவாக்கினார்கள். இப்பகுதி மிக கடினமான காணப்பட்டது ஆனால் 15–20 வருடங்களுக்கு முன் எப்படி இருந்திருக்கும் என நினைத்தோம்.

அதன்பின்பு மத்தியப்பிரதேசத்தில் மான்லி என்ற கிராம ஆலயத்தை பிரதிஷ்டை செய்ய கிராமத்திற்கு வந்தடைந்தோம். விசுவாசிகள் மேளதாளத்துடன் வெயிலில் காத்துக் கொண்டிருந்தார்கள். உற்சாகமான பாடல்களை பாடி ஜெபத்துடன் பிரதிஷ்டை செய்து உள்ளே பிரவேசித்தோம். அதற்கு முன்பாக காலையில் பேராயர் தேவதாஸ் அவர்கள் சென்று சிறப்பு பிரதிஷ்டை ஜெபத்தை செய்து ஆசீர்வதித்து வந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

எங்கள் அனைவருக்கும் தலைப்பாக்களை கட்டி சால்வைகளை அணிந்து எங்களை கௌரவப்படுத்தினார்கள். சபைகளின் மூத்த போதகர்கள் Rev. **மத்தூர் புரியா, Rev. சர்தார் டாமோர், Rev.** **ரமேஷ் டாமோர்** ஆகியோர் பங்குபெற்றார்கள். பாடல் ஆராதனையை

**சகோ. பிராங்கிளின்** நடத்த, ஆவியில் நிறைந்து நடனமாடி துதித்தும், அர்ப்பணித்தும் தேவனை மகிமைப்படுத்திய காட்சியைக் கண்டு பரவசமடைந்தோம். நாங்கள் வாழ்த்து செய்தியும், தேவனுடைய வார்த்தையை கொடுக்க **சகோ. ஜெயராஜ்.** அவர்கள் மொழிப் பெயர்த்தார்கள். காணிக்கைகளை உற்சாகமாக படைத்தார்கள். கிராம பாணியில் அவர்கள் அனைத்து விசுவாசிகளும் கொடுத்த விருந்தினை அனைவரும் சந்தோஷமாக சாப்பிட்டார்கள்.

பின்பு 20 கிலோ மீட்டர் பிரயாணம் செய்து நதிகள், குன்றுகள் என கடந்து வந்து அந்தர்வெளியா சபையினரை சந்தித்தோம். பல வருடங்களுக்கு முன்பு அதிகமான பாடுகள் எதிர்ப்புகள் மத்தியில் நம்முடைய அர்மதா ஜீப் கூட எரிக்கப்பட்டு, ஆலயத்திற்கு வந்த தடை காரியங்களை பகிர்ந்தார்கள். இன்று மிக பெரிய ஆலயத்தில் கிராமத்தின் பெரும்பாலானோர் இயேசுவை ஏற்றுக்கொண்டதும், Compassion மூலமாக 250 ஆதிவாசி பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்படுகிறது மகிழ்ச்சியாக இருந்தது.

அதை தொடர்ந்து 5 கிலோ மீட்டர் தொலைவில் மிகவும் திருடர்கள், குழந்தைகள் நிறைந்த கிராமங்களில் குறிப்பாக மேந்திமகடா கிராமத்தில் உள்ள மிகப் பெரிய ஆலயத்தையும், அங்குள்ள 80 விசுவாசக் குடும்பங்களின் சாட்சி, சபைகளின் சாட்சி போன்றவற்றையும், அந்த பகுதியில் கடந்த மாதம் பல நூறு பேர்கள் ஞானஸ்நானம் பெற்றதையும் கேள்விப்பட்டபோது தேவனை மகிமைப்படுத்தினோம்.

அதன் பின்பு 28 ம் தேதி ஞாயிற்றுக் கிழமை குஜராத் மாநிலத்தில் உள்ள சில ஷாலோம் சபைகளைக் காணவும், ஆராதனையில் பங்கு பெறவும் **சகோ. சாமுவேல்** மற்றும் சகோ. கேரட் தலைமையில் கடந்து சென்றோம். குறிப்பாக தில்சர் மற்றும் வரம்கேடா கிராமத்தில் 2 சபைகள், பாட்டன்புரா கிராம ஆலயம் மற்றும் கங்கேரா கிராம ஆலய ஆராதனையைக் காணவும் தேவன் கிருபை தந்தார். அனைத்து ஆலயங்களிலும் விசுவாசிகள் நிரம்பி காணப்பட்டார்கள். படிப்பறிவில்லாத பெரும்பாலான விசுவாசிகள் கையில் வேத புத்தகத்தை வைத்திருந்தது குறிப்பிடதக்கது. நடனமாடி பாடல்களைப் பாடினதும், ஆராதனை வேளையில் கண்களை மூடி தேவ பிரசன்னத்தில் நிரம்புவதையும் கண்ட போது 100 வருட கிறிஸ்தவர்களாய் இருக்கும் நம்மை காட்டிலும் ஆவிக்குரிய உன்னதமான நிலைமையில் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டோம். ஆங்காங்கே ஆலயங்களில் வாழ்ந்து செய்திகளையும், ஜெபங்களையும், தேவனுடைய வார்த்தைகளையும் பகிர்ந்து கொண்டோம். சுமார் 2 மணியளவில் தாகோத் வந்தடைந்து மதிய உணவு அருந்தியவுடன் 40 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கும் கரம்பா ஆலய பிரதிஷ்டைக்கு கடந்து சென்றோம்.

சுமார் 4 மணியளவில் கரம்பா கிராமத்தை வந்தடைந்தோம். பேராயர். தேவதாஸ் அவர்கள் காலையில் மத்தியப் பிரதேசத்தில் 3 சபைகளைச் சந்தித்து செய்தி கொடுத்து எங்களுடன் கரம்பா கிராமத்திற்கு வந்து இணைந்து கொண்டார்கள். கிராம விசுவாசிகள் திரளாக மேள தாளத்துடன் உற்சாகமாக காத்துக்கொண்டிருந்தார்கள். **பேராயர். தேவதாஸ்** அவர்கள் ஆலயப் பிரதிஷ்டைக்கான ஜெபத்தை ஏறெடுக்க, **சகோ. விஜயசிங்** அவர்கள் ஆலயத்தை ஜெபித்து திறந்து வைத்தார்கள். ஆலயம் முழுவதும் விசுவாசிகள் நிரம்பி இருந்தபடியினால் நெருக்கமான சூழ்நிலையில் பாடி ஆராதித்தார்கள். எங்கள் அனைவருக்கும் கலாச்சார வரவேற்பு கொடுத்தார்கள். நாங்கள் வாழ்த்து செய்திகளை பகிர்ந்து கொள்ள **பேராயர். தேவதாஸ்**

அவர்கள் தேவ செய்தி வழங்கினார்கள். ஜெப வேளையில் பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தையும், விடுதலையையும் அநேகர் பெற்றார்கள். சபை மக்கள் உற்சாகமாக காணிக்கை படைத்ததை கண்டோம். எங்களுடன் சென்னை சேத்துப்பட்டு M.C.C பள்ளியில் இருந்து ஷாலோம் ஆதிவாசி மாணவர்களுக்கு ஆங்கில பயிற்சி வகுப்புகள் ஒரு வாரம் நடத்த வந்திருந்த அன்பு சகோதரிகள் **சகோ. அனிதா, திருமதி. கிறிஸ்டினா, திருமதி. பியூலா, திருமதி. கிறிஸ்டினா பிரின்ஸ்** எங்களுடன் கலந்து பரவசத்துடன் தேவனை துதித்தார்கள்.

ஆராதனை முடிந்த பின்பு அனைத்து விசுவாசிகளுக்கும் சிறப்பு உணவு கொடுக்கபட்டது. எங்களுக்கும் கிராமப் பாணியில் மக்காச்சோள ரொட்டிகளை சுட்டு மிகவும் காரமான குழம்புகளை வைத்து, எங்களுக்கு கொடுகக நாங்கள் விரும்பி உண்ணும் வாய்ப்பு கிடைத்தது. பீல் ஆதிவாசிகளுடைய உணவு, உடை கலாச்சாரம் பயன்படுத்துகிற வில், அம்பு இளைவகளை கண்டு ஆச்சரியப்பட்டோம். மிகவும் ஏழ்மையான வாழ்க்கை தரத்தை கண்டு இவர்கள் பொருளாதார ரீதியில் தேவன் இவர்களை ஆசீர்வதிக்க வேண்டும். குறிப்பாக, சிறந்த பள்ளிகள், கல்லூரிகள் மேலும் சரியான படிப்பு வசதிக்கான பண வசதி இல்லாமல் கஷ்டபடுவதைக் கண்டு மனதில் பாரம் கொண்டோம். ஷாலோம் ஊழியத்தின் மூலம் சுமார் 2000 மாணவர்களை படிக்க வைப்பது பாராட்டத்தக்கது. இன்றும் பல ஆயிர மாணவர்கள் கல்வியறிவு பெற உதவுவது குறிப்பாக உயர்க்கல்விக்காக அவர்களுக்கு வழிகளை திறந்து கொடுக்க வேண்டும். 3 மாநிலங்களிலும் பல பள்ளிக் கூடங்களை கட்டி எழுப்ப வேண்டும். 2 ஆலயங்களை பிரதிஷ்டை செய்தோம். ஆனால் 200 ஆலயங்கள் கட்டி கொடுக்க வேண்டிய தேவை இருப்பதை கண்டறிந்தோம். 1 கோடி பீல் மக்கள் , 7000 கிராமங்களில் நிச்சயமாக நம் தலை முறையிலேயே சந்திக்கப்படுவார்கள்.

நாங்கள் ஜெபித்து தாங்கி வருகிற மாங்கிலால் அமளியார் குடும்பத்தை பணித்தளத்தில் கண்டு மகிழ்ச்சி அடைந்தோம். மேலும் விசுவாசிகளுக்காக கொண்டு வந்த குஜராத்தி 100 வேதப் புத்தகங்களை போதகரிடம் வழங்கினோம். மிகுந்த சந்தோஷத்தோடு தேவனை துதித்து பெற்றுக் கொண்டார்கள். இதைப்போல ஹிந்தி, குஜராத்தி வேதப்புத்தகங்கள் 5000 தேவை என்று கேள்விப்பட்டு பாரம் கொண்டோம். நீங்களும் கொடுக்க முன்வரலாமே.

நேர்த்தியாகக் கட்டப்பட்ட ஆலயங்கள், சுதேச ஊழியர்கள், மறுரூபமாக்கப்பட்ட பீல் மக்கள் அனைத்தையும் பார்த்ததில் உள்ளம் ஆனந்தம் கொண்டோம். நாங்களும், இவர்களும்– அவருக்குள்ளாக மீட்கப்பட்டோம் என்பதை உணர்ந்தோம்.

**"ஜெய் ஈசு"** என்று கரம் கொடுத்து எங்களை வரவேற்ற பீல் மக்களுக்கு உள்ளத்தின் ஆழத்தில் இருந்து நன்றிகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்து அவர்களுக்காக ஜெபிக்கிறோம்.

எங்களை அரவணைத்து வாகனம், உணவு, இருப்பிடம் தந்து உள்ளம் மகிழ வைத்து உபசரித்த ஷாலோம் திருமண்டலப் பேராயர். **V. தேவதாஸ்** மற்றும் **சகோதரி வஹிதா தேவதாஸ்** குடும்பத்திற்காக தேவனைத் துதித்து நன்றி கூறுகிறோம். தேவனுக்கே மகிமை!

ஷாலோம் ஊழியங்களுக்காக, **பேராயர். தேவதாஸ்** அவர்கள் குடும்பங்களுக்காக, உடன் ஊழியர்களுக்காக, பீல் சுதேச ஊழியர்களைத் தாங்கி, ஆதிவாசி மாணவர் கல்விக்கு உதவி, கிராம ஆலயங்களை இப்பொழுதே கட்டி கொடுத்து நல்ல நிலமாகிய ஷாலோம் பணித்தளத்திற்காக கண்ணீருடன் ஜெபிப்போம்.

மிஷனெரி முன்னோடிகள்

# NôùXôúUôu Gp. ¡u v Tod



*“பிரேசிலின் எரிபந்தம்”*

**கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். மத்:7:7**

**சாலொமோன் கின்ஸ்பர்க** போலந்திலுள்ள சுவால்க்கி அருகில் ஆகஸ்டு 6 ஆம் தேதி, 1867 ல் பிறந்தார். அவருடைய தகப்பனார் ஒரு யூத ரபீ. அவர் தன்னுடைய மகன் அவ்வழியை பின்பற்றி, ரபீயாக மாற விரும்பினார். ஏற்கனவே, ஒரு பணக்கார யூத குடும்பத்து ஒரே மகளைத் தன் மகனுக்கு திருமணம் செய்ய ஒழுங்கு செய்திருந்தார். கின்ஸ்பர்க் குதிரைகளை ஏற்றிச் செல்லும் கப்பல் மூலம் லண்டன் போய் சேர்ந்து, அங்கு தன் யூத மாமனுடைய பண்டகசாலையில் வரவு செலவு கணக்கராக பணியில் அமர்ந்தார்.

ஒருநாள் கின்ஸ்பர்க எதிர்பாராத விதமாக ஏசாயா தீர்க்கதரிசியின் 53 ஆம் அதிகாரத்;த வாசிக்கலானார். அப்பொழுது தன் தகப்பனிடம் யாரைப் பற்றி ஏசாயா தீர்க்கத்தரிசி குறிப்பிடுகிறார் என்று கேட்டதும் ஆழ்ந்த அமைதி உண்டாயிற்று. தந்தையிடம் பதில் வராததால் அவர் திரும்ப அந்த கேள்வியைக் கேட்டார். தந்தை, மகன் கையிலிருந்த புத்தகத்தைப் பிடுங்கி எதிர்பாராமல் முகத்தில் ஓங்கி அறைந்தார்.

ஒரு ஓய்வு நாள் மதியம், மனந்திரும்பிய ஒரு யூதன் ஏசாயா 53 ஆம் அதிகாரத்தின் விளக்கம் தருகிறேன். வா என்று அழைத்தனர். அவன் விளக்கி கூறும் போது இயேசுவின் வாழ்க்கை பற்றியும் நிறைவேறின தீர்க்க தரிசனத்தையும் ஆவலோடு கவனிக்கலானார். அதை அவர் முழுமையாக புரிந்து கொள்ளவில்லை என்றாலும் மேசியாவைப் பற்றின கொல்கொதா தெய்வீகப் படத்தின் மூலம், ஏசாயா 53ல் உள்ளதை புரிந்து கொண்டார். அவர் ஒரு புதிய ஏற்பாட்டைப் பெற்று வாசிக்கலானார்.அப்பொழுது இஸ்ரவேலரால் தள்ளப்பட்ட மேசியா இயேசு கிறிஸ்து என்று நம்பினார். அவர் இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்டதினால், சுடு தண்ணீரை ஊற்றி, விளக்குமாரால் அடித்து , சாப வார்த்தை கூறி, வீட்டை விட்டு விரட்டப்பட்டார். சனிக்கிழமை மதியம் தோறும், வெல்க்குலோஸ் ஸ்கொயர் மிஷனில் நடை பெறுகின்ற கூட்டத்தில் கலந்து கொள்ள ஆரம்பித்தார். அதிலிருந்து புதிய ஏற்பாட்டை ஆவலோடு வாசிக்கத் தொடர்ந்தார். வீட்டில் மூன்று மாதக்காலம் தொடர்ந்து போராட்டமாயிருந்தது. இதனால் சில நாட்களாக அவரால் தூங்கவும் சாப்பிடவும் இயலவில்லை. வீட்டில் கொடுமைப் படுத்தப்பட்ட செய்தியும் இயேசுவை ஏற்றுக் கொண்ட செய்தியும் வேகமாக பரவியது. அவர் ஞானஸ்நானம் எடுத்த அந்த ஆராதனையில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட ஜனங்கள் கலந்து கொண்டார்கள். கின்ஸ்பர்க் வேதாகம வகுப்பில் அங்கத்தினராக சேர்ந்து, ஒவ்வொரு ஞாயிறும் காலை உணவிற்கு முன் திரு. பெடிநோக் என்பவரால் போதிக்கப்பட்டார். அங்கே அவர் ஆவிக்குரிய வளர்ச்சியிலும் ஐக்கியத்திலும் வளர்ந்தார்.

ஒரு ஞாயிறு காலையில் அநேக வேதபாட வகுப்பு உறுப்பினர்களைக் கூட்டிச் சேர்த்து, கிழக்கு லண்டனில் தன் ஜனங்களாகிய யூதர்களுக்கு சாட்சி பகர அழைத்துச்சென்றார். அவர் இயேசுவை பற்றிக் கூற ஆரம்பிக்கும் போதே, பவுல் லீஸ்திராவில் தாக்கப்பட்டது போல, யூதர்களால் கின்ஸ்பர்க்கும் தாக்கப்பட்டு இரக்கமில்லாமல் அடிக்கப்பட்டு, வதைக்கப்பட்டு சாகும் தருவாய்க்குள்ளானார். தனக்கு உணர்வு வந்தபோது தன் உடைகள் இரத்ததினால் நனைந்திருப்பதையும், சரீரம் இரத்த காயங்களால் நிறைந்திருப்பதையும் சில எலும்புகள் முறிக்கப்பட்டு தான் ஒரு குப்பைத் தொட்டியில் கிடப்பதையும் கண்டார். பின் இவைகள் மகிமையான நேரங்கள் என்று கூறினார். மற்றொரு நேரம் சில செருப்பு தைக்கிற யூதர்கள் சுத்தியல், கத்தியோடு வந்து அவரைக் கொலை செய்ய சுழல் மெத்தைபடியில் வீசினார்கள். ஆனால் அவர் கீழே விழும்போது படியின் ஓரத்தைப் பிடித்து உயிர் தப்பினார்.

அவர் ஜெபித்து கொண்டிருந்தபோது பிரேசில் நாட்டின் புறக்கணிக்கப்பட்ட மக்கள் தங்கள் கரங்களை நீட்டி தங்களுக்கு உதவி செய்யும்படி தன்னை அழைப்பதாக உணர்ந்தார். ஆகவே, அதுவே தேவனுடைய சித்தம் என் உறுதிசெய்து, தன் வாழ்க்கையை பிரேசிலுக்கு சென்று ஊழியம் செய்ய அர்ப்பணித்தார். அவருடைய பிரிவு உபச்சார விழாவில் சீன மிஷனின் ஹட்சன் டெய்லரும் பங்கேற்றார்.

1890 வருடம் ஜீன் 10ம்தேதி, ரியோ–டி–ஜெனிரோ என்ற இடத்திற்கு சென்று தன் ஊழியத்தை ஆரம்பித்தார். ஒரு ஞாயிறு மதியம், பொதுவான இடத்தில் ஒரு மேசை இரவல் வாங்கி, அதன் மேல் ஏறி, **"There is a fountain filled with blood"** என்ற பாடலைப்பாடி இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தில் விசுவாசம் வைக்க வேண்டும் என்று பிரசங்கித்த போது, 5000 பேர் கூடி அந்த பிரசங்கத்தைக் கேட்டார்கள்.

இங்கிலாந்திலிருந்து வந்த மிஸ். பிஷப் என்பவர் அவருடைய துணைவியானார். ஆனால் அவர்களுடைய சந்தோஷம் குறுகிய காலம் மட்டுமே நீடித்தது, ஏனென்றால் போதுமான வருமானமின்மையினால் தன் மனைவியோடு பழைய ஜெசுவிட் ஜெயிலில் விரும்பதகாத குடியிருப்பில் வாழ்ந்ததினால், அவள் மஞ்சள் காய்ச்சலால் 5 மாதத்திற்குள்ளாக இறந்து விட்டார். தன் உயிர்போகிற கடைசி நேரத்தில் நல்ல புன்சிரிப்போடு, தன் கணவரிடம் எனக்காக அழாதீர்கள், நான் சந்தோஷமாக இருக்கிறேன். ஏனென்றால் நான் என் அப்பாவின் வீட்டிற்குச் செல்கிறேன் என்று சொல்லி கர்த்தருக்குள் நித்திரையடைந்தாள்.

1983ம் வருடம் கின்ஸ்பர்க் எம்மா மார்ட்டன் என்பவரை மணந்தார். காம்போஸ் என்ற இடத்தில் மிஷன் வேலையை ஆரம்பித்தார்கள். தேவனிடத்தில் கேளுங்கள்; மனிதரிடத்தில் தேவைகளை சொல்லுங்கள். என்பது அவருடைய கோட்பாடு தன் மனைவியோடு சான் பிடிலிஸ் என்ற இடத்தில் ஆர்கன் வைத்து பாடின போது சுமார் 1000 பேர் கூடினார்கள். அங்கு அவர் கைது செய்யப்பட்டு 6*15 அடி சிறையில் 40 குற்றவாளிகளோடு அடைக்கப்பட்டார். அவருடைய மனைவி கவர்னரிடம் பேசியதால், அவருக்கு தயவு கிடைத்தது. விரைவில் சான் பிடிலிஸ்ஸில் ஒரு ஆலயம் உருவானது.

1900–1009 வருடங்களில் பெர்னாம்புகோ என்ற இடத்தில் டாக்டர் என்ஸ்மிங்கர் என்பவரோடு சேர்ந்து ஊழியம் செய்ததினிமித்தம் ஒரு பெரிய ஆலயம் கட்டப்பட்டது. ஒவ்வொரு

ஞாயிறு காலையிலும், ஆலயம் விசுவாசிகளால் நிறைந்து வழிந்தது. ஆகவே ஆலய ஆராதனை முடிவில், காலையில் வந்தவர்கள் மாலை ஆராதனைக்கு வராமல் பக்கத்திலுள்ளவர்களிடத்தில் சென்று சாட்சி கூறும்படியாகவும் அதனால் மாலை ஆராதனைக்கு புதிதாக வருபவர்கள் சுவிசேஷம் கேட்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்றும் அறிவிப்பு கொடுக்கப்பட்டார். ஒவ்வொருவரும் வீடு வீடாகச் சென்று சுவிசேஷ ஊழியம் செய்ததினால், ஞாயிற்று கிழமை இரவில் 800 முதல் 1000 பேர் வரை ஆலயத்தில் கூடினார்கள். இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு சாட்சியாக வாழ்ந்தார்கள். சுவிசேஷம் இவ்விதமாய் பரவியதால், கின்ஸ்பர்க் மற்ற பாதிரிகளால் அதிகம் எதிர்க்கப்பட்டார்.

பிரேசிலில் கிறிஸ்தவ தலைவர்களை உருவாக்க வேண்டும் என்ற பாரத்தினால், பத்து மாணவர்களைக் கொண்ட வேத, தத்துவ, வரலாற்று வகுப்புகளை ஆரம்பித்தார். அது பின்னர் இரண்டு பெரிய கல்லூரியாகவும இரண்டு சிறப்பு வாய்ந்த வேதாகம பயிற்சிக் கூடமாகவும் மற்ற நிறுவனங்களுமாக உருவாகின. இதன் மூலமாய் கிறிஸ்துவத் தலைவர்கள் அலை அலையாக உருவாக்கப்பட்டார்கள். கின்ஸ்பர்க் ஜெபத்தில் வல்லவர், ஜெபத்தின் மூலமாக அற்புதங்களைப் பெற்றவர்.

கின்ஸ்பர்க் வெளியீட்டுத்துறையை ஆரம்பித்தார். அதன் மூலமாக 750 சிறைகளுக்குப் புதிய ஏற்பாடுகளும், பாடல் புத்தகங்களும், ஆன்மீக வார இதழ்களும் அனுப்பப்பட்டன. இதனால் ஊழியத்திற்கு பெரிய ஆசீர்வாதம் கிடைத்தது. மிகவும் ஆபத்து நிறைந்த பெர்னாம்புகோவிற்கு காவல் துறையினரே செல்ல முடியாத திருடர் குகைக்கும், கொலை செய்ய அஞ்சாதவர்களிடமும் சுவிசேஷத்தை சுமந்து சென்றார். ஹெர்குலேனோ என்ற பிரசித்தி பெற்ற கொலையாளி மனம்மாறி, ஆர்வமுள்ள அமைதியான கிறிஸ்தவனாக மாறினான்.

1891 ம் வருடம் சாலொமோன் பாப்திஸ்டு மிஷனில் சேர்ந்த போது, இரண்டு பெரிய ஆலயங்களும் பல சிறிய ஆலயங்கள் மட்டுமே இருந்தன. 1920 ம் ஆண்டு அவைகள் 820 ஆலயங்களாகவும் சுமார் 20,155 விசுவாசிகளை கொண்டதாகவும் வளர்ந்தன.

முப்பது வருடங்களுக்கு மேலாக கர்த்தருக்கென்று இடைவிடாமல் ஊழியம் செய்து, பெரிய வெற்றியைக் கண்டடைந்தார். பிரேசிலின் எரிபந்தம் என்று கருதப்பட்ட கின்ஸ்பர்க், 1927 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் முதல் தேதியியல் தேவ ராஜ்யம் சேர்ந்தார்.

ஜெபியுங்கள்! பங்கு பெறுங்கள்!!

Yôd Ï jRjR BºoYôR ù_Td áÓû L

| நாள் : **03.06.2013 (திங்கள்)** | நேரம் : **காலை 9.30 மணி முதல் 1.00 மணி வரை** |
|---|---|

இடம் : **அன்பு பகிர்வு இயக்கம், தலைமை அலுவலகம்**

5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 628 008.

தேவ செய்தி : **Prof. C.S. கிறிஸ்டோபர்,** பாளையங்கோட்டை

## காணிக்கை அனுப்பும் வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.
- காணிக்கைகளை M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.
- D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை அனுப்பலாம்.
- உங்களது வங்கிக் கணக்கில், Net Transfer வசதி இருந்தால் Net Transfer மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.
- **www.shalommission.in** இணைய தளத்தின் மூலமாகவும் காணிக்கைகளை அனுப்பலாம்.

***நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.***

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

**AXIS BANK (U.T.I)**
**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

**ICICI Bank**
**A/C. No. 613901112799**
**(IFS Code : ICIC0006139)**

***குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப....***

| | | |
|---|---|---|
| வங்கிக் கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கிக் கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கிக் கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch** |

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் காணிக்கை செலுத்தியபின், உடனடியாக இந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் காணிக்கை செலுத்திய விபரத்தினை எங்களுக்குத் தெரிவியுங்கள்.

இந்தியாவின் முதல் வழிகாட்டி செயற்கைக்கோள் ஜுன் 12ம் தேதி விண்ணில் செலுத்தப்படுகிறது. இந்தியா முழுவதையும் கண்காணிக்கவும், கடல், தரை வான்வெளியில் வழிநடத்தவும் ஆற்றல் பெற்ற வழிகாட்டி செயற்கைக்கோளை இஸ்ரோ உருவாக்கியுள்ளது. ஐ.ஆர்.என்.எஸ்.எஸ் – 1 என்று பெயரிடப்பட்டுள்ள இந்த செயற்கைக்கோள் 1,425 கிலோ எடை கொண்டதாகும். இந்த செயற்கைக்கோளின் ஆயுள்காலம் 10 ஆண்டுகள் ஆகும்.

அமெரிக்காவின் இடாஹோ நகரைச் சேர்ந்த மைக்கேல் வாட்கினஸ் என்பவன் அங்குள்ள மிருகக் காட்சி சாலை ஒன்றில் பட்டாஸ் வகைக் குரங்குகளை திருடிச் செல்ல முயன்ற போது அவனிடமிருந்து தப்பிச் செல்ல முயன்ற குரங்கினை கொடூரமாக அடித்துக் கொன்ற குற்றத்திற்காக அவனுக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் ஒரு ஆண்டு அவனது வாழ்க்கையை மிருகங்களோடு கழிக்க வேண்டும் என்றும் அங்குள்ள நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

பள்ளிப் பிள்ளைகளின் கற்கும் திறனில் அவர்களது தூக்கமின்மை அல்லது தூக்கம் கெட்டுப் போதல், அவர்களின் கணிதம், விஞ்ஞானம் மற்றும் வாசிப்புத் திறனில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அண்மை ஆய்வு ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளது. சர்வதேச பரீட்சைகளை நடத்தும் ஆய்வாளர்கள் இதனைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். தூக்கம் குறைவான நிலைமையில் மூளை புதிய விசயங்களை உள்வாங்க தடுமாறுவதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். கணிணியில் விழித்திருத்தல், நண்பர்களுக்கு அதிகமான மெசேஜ்களை அனுப்புவர்கள் ஆகியோர் இதனால் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.

உத்திரப்பிரதேச மாநிலம் லக்னோவிலிருந்து கடந்த 17ம் தேதி மும்பை சென்று கொண்டிருந்த ஏர் இந்தியா விமானத்தில் திடீர் கோளாறு ஏற்பட்டதால் அவசரமாக தரை இறக்கப்பட்டது.

நன்றி : www.bbc.co.uk

## எங்களுடன் தொடர்பு கொள்ள

தலைமை அலுவலகம்

**SHARING LOVE MISSION**
New No. 5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street,
**Tuticorin - 628 008.** Tamil Nadu.

Phone: 0461 - 2375468
Cell : 9345675468

பணித்தள அலுவலகம்

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Shalom, Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat

Ph. : 02673 - 325468
Cell : 09377445468

**email : info@shalommission.in website : www.shalommission.in**

## கிராம ஆலயம்

# கரம்பா குஜராத்



குஜராத் மாநிலம் தாகோத் மாவட்டத்தில் ஜாலோத் தாலுகாவில் இந்த கரம்பா கிராம ஆலயம் அமைந்துள்ளது. மிகவும் உள்ளடங்கிய இந்தக் கிராமத்தில் மருத்துவம், கல்வி, மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் கிடையாது. இங்குள்ள பெரும்பாலானோர் சாராயத்தைக் குடித்தும், பில்லிசூனியம் செய்தும், அடிக்கடி ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டும் வாழ்ந்து வருவார்கள். இந்தக் கிராமத்தில் பூர்சிங் கராசியா என்ற சகோதரரின் குடும்பம் பிசாசின் பிடியில் சிக்கி 2 வருடங்கள் மிகவும் கஷ்டப்பட்டு வந்தது. பிசாசின் பிடியில் இருந்து விடுதலைப் பெற 12 கோழிகள், 4 ஆடுகள் போன்றவற்றைப் பலி செலுத்தியும் மந்திரப் பூஜைகள் செய்தும் பல மருத்துவர்களிடம் சென்று மருந்துகள் சாப்பிட்டும் எந்தப் பலனும் உண்டாகவில்லை.

இந்த சூழ்நிலையில் மல்வாசி கிராமத்தில் வசித்து வந்த இவரது சொந்த சகோதரர் விசுவாசியாக இருந்தபடியால் சகோ. பூர்சிங் கராசியா அவர்களுக்கு ஆண்டவரைப் பற்றி எடுத்துக் கூறி, 10 கீ.மீ. தொலைவிலுள்ள வாங்கோல் கிராமத்திலுள்ள ஷாலோம் சபைக்கு அழைத்துச் சென்றார். அந்த சபைப் போதர் இவருக்காக பாரத்தோடு ஜெபிக்கவே, தேவன் ஜெபத்தினைக் கேட்டு பிசாசின் பிடியிலிருந்தும், நோய்களிலிருந்தும் இந்தக் குடும்பத்திற்கு பூரண விடுதலையைக் கொடுத்தார்.

இந்த அற்புதத்தைப் பெற்ற இந்தக் குடும்பத்தார் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்கராக ஏற்றுக் கொண்டனர். மேலும் இதைப் பார்த்த அவரது கிராம ஜனங்களில் 7 குடும்பத்தாரும் கிறிஸ்து இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றனர். அவர்களில் சகோ. கூமன் டாமோர் அவர்கள் ஊழியத்திற்காக தன்னை அர்ப்பணித்து, கரம்பா கிராமத்தில் தனது ஊழியத்தினைத் துவக்கினார். நாளடைவில் அங்கு நடைபெற்ற அற்புத அடையாளங்களைக் கண்ட ஜனங்கள் ஆண்டவரை விசுவாசிக்க ஆரம்பித்தனர். தற்போது 42க்கும் அதிகமான குடும்பத்தார் ஆண்டவரை சொந்த இரட்கராக ஏற்றனர். மேலும் சகோ. பூர்சிங் கராசியா அவர்கள் தனது சொந்த நிலத்தை ஆலயம் கட்ட காணிக்கையாகக் கொடுத்தார்.

அந்த இடத்தில் 40x20 என்ற அளவிலான தேவாலயம் கட்டப்பட்டு, கடந்த 28.04.2013 ஞாயிறு அன்று நமது ஷாலோம் திருமண்டலப் பேராயர் V. தேவதாஸ் அவர்கள் தலைமையில், தூத்துக்குடி, கடற்கரை ஜெப ஐக்கியத்தினரின் சார்பாக சகோ. விஜயசிங் அவர்களால் ஜெபித்து பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதற்கு நிதி உதவி ரூ. 2 இலட்சம் வழங்கிய தூத்துக்குடி கடற்கரை ஜெப ஐக்கியத்தினை தேவன் ஆசீர்வதிப்பாராக!

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் இந்த 2013ம் ஆண்டிற்குள் 100 ஆலயங்கள் கட்டிக் கொடுக்க முன் வருவோர் தேவை! ஜெபியுங்கள்!!**

# ஷாலோம் மிஷனெரிகளின் பிரதிஷ்டை – 28.04.2013

## C.S.I. பரி. பேதுரு ஆலயம், பாளையங்கோட்டை





கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுவதாக! கடந்த 28.04.2013 ஞாயிறு அன்று பாளையங்கோட்டை N.G.O. 'B' காலனியிலுள்ள CSI. தூய பேதுரு தேவாலயத்தில் நடைபெற்ற காலை ஆராதனையில் ஷாலோம் சுதேச ஊழியர்களின் பிரதிஷ்டை நடைபெற்றது.

இதில் குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் ஆகிய 3 மாநிலங்களில் இருந்து ஒன்பது பீல் சுதேச ஊழியர்கள், சபை குருவானவர் Rev. Dr. பிரே S. ஜேம்ஸ் அவர்கள் மற்றும் சபை ஊழியர் Bro. S. அகஸ்டின் அவர்கள் முன்னிலையில் மிஷனெரிகள் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். அவர்கள் தங்களது அனுபவ சாட்சிகளைப் பகிர்ந்து கொள்ள சகோ. சாம் குணசீலன் அவர்கள் மொழியாக்கம் செய்தார்கள். இந்த மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனையை Prof. C.S. கிறிஸ்டோபர் அவர்கள் ஒழுங்கு செய்திருந்தார்கள். சபை போதகர், சபை அங்கத்தினர்கள் மற்றும் ஊழியர்களைத் தாங்க முன்வந்த ஆதரவாளர்கள் அனைவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம், தேவனுக்கே மகிமை!

**பிரதிஷ்டை செய்யப்பட்ட மிஷனெரிகள் மற்றும் அவர்களைத் தாங்குவோர் விபரங்கள் :–**

| ஊழியர் | பணித்தளம் | மாநிலம் | தாங்குவோர் குடும்பம் |
|---|---|---|---|
| 1. சகோ. ரமன் பாய் புரியா | நாவகம்தாள், | குஜராத் | Mas. போனி வின்சென்ட் |
| 2. சகோ. கதுரா டாமோர் | குப்பாடா, | குஜராத் | Mr. M.K. ரவிந்திரன் சார்லஸ் |
| 3. சகோ. தனுபாய் பாரியா | அம்பாகாஷ், | குஜராத் | Mr. பிஜு டேனியல் |
| 4. சகோ. பிரபுலால் கட்டாரா | வீர்பூர், | மத்தியப்பிரதேசம் | Mr. சாலமோன் |
| 5. சகோ. பிரகாஷ் சந்திர மேடா | டைரி, | மத்தியப்பிரதேசம் | Mr. ஹெரால்டு |
| 6. சகோ. சாம்புசிங் கர்வாள் | சிமளியா, | இராஜஸ்தான் | Mr. குணசிங் |
| 7. சகோ. தாவு முன்தாட் | வீஜியால்காவ்பாடி, | இராஜஸ்தான் | Mr. ஹமில்டன் |
| 8. சகோ. சாய்சிங் S. பிரேம்ளே | ஜுனா ஜீரா, | இராஜஸ்தான் | Mr. சாந்தக்குமார் |
| 9. சகோ. நானு ராம் | கட்வாளியா, | இராஜஸ்தான் | Mrs. பரிபூரணம் மரகதம் |